# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

தொகுதி - ௨ | விபவ ஹூ - அற்பிசி மீ | பகுதி - ௰

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
5- NOV 1928
MADRAS

உள்ளடக்கம்.

செங்குந்த முதலிமார் மடங்கள் ... ௱௨௧
ஆராய்ச்சிப் பகுதி : ஈட்டி எழுபது ... ௱௩௨
குலதிலகர் பகுதி : முத்துப்பண்டிதர் ... ௱௩௫
அறிவியற் பகுதி : ஞாயிற்றின் கதிர்கள் ... ௱௩௬
மாதர் பகுதி : "பெண்மக்கள் நிலையும் இந்து சாஸ்திரமும்" ... ௱௩௯
நாவல் பகுதி : காதலி குடும்ப மகமை ... ௱௪௧
சுகாதாரப் பகுதி : முறை ஜுரம் அல்லது மலேக்காய்ச்சல் ... ௱௪௪
பொது விஷயங்கள் : செங்குந்தரும் செந்தமிழும் ... ௱௪௬
உலக விநோதங்கள் ... ௱௪௮
செங்குந்தர் கிளர்ச்சி ... ௱௫௰
சந்தா நேயர்களுக்கு அறிக்கை ... ௱௫௯
1928ஹு சந்தா செலுத்திய நேயர்கள் .... ௱௬௰
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு ஆவணி, புரட்டாசி மாத வரவு ... ௱௭௰
வர்த்தமானப் பகுதி ... ௱௭௧
செங்குந்தர் பஞ்சாங்கம் ... ௱௭௨

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

Registered No. 1514

## செங்குந்தமித்திரன் சில முக்கியமான குறிப்புக்கள்.

(1) நமது பத்திரிகை ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் நான்காம் தேதி தபாலில் போடப்படும். இதில் தவறுதலேனும் தவக்கமேனும் நேராது. எந்தச் சஞ்சிகையாவது யாருக்காவது எம்மாதமேனும் கிடைக்காமலிருந்தால் அவர் தபால் அதிகாரிகளுக்கு மனு எழுதி எமக்கும் தெரிவிக்கவேண்டும்.

(2) சந்தாதாரர் எந்த மாதத்திற் சேரினும் தைமாதம் முதற்கொண்டே சேர்ந்ததாகக் கணக்கிடப்பட்டு அது முதலுள்ள சஞ்சிகைகள் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் அனுப்பும் கடிதங்களிலும் மணியார்டர்களிலும் அவரவர்களுடைய சந்தா நெம்பரைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும். சந்தா நெம்பர்கள் போடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

(4) புதிய சந்தாதாரர்கள் அனுப்பும் கடிதங்களிலும் மணியார்டர்களிலும் 'புதிய சந்தாதார்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

### விளம்பர விகிதங்கள்.

'செங்குந்த மித்திர'னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன் பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும். மாதம் மாதம் 4,000 பிரதிகள் அச்சாகின்றன. ஜாதிய பத்திரிகைகளுள் இதற்கு மேலான பத்திரிகை யில்லை :—

| | | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம். |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ பக்கம் | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ், 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

---

முதல்தரமான வேலைப்பாடு! நம்பிக்கையான வேலைக்காரர்கள்!!

## நகைகள்! நகைகள்!

### குறைந்த சார்ஜுகள்.

நாங்கள் சிமைக்கமலங்களிலும், இதர கற்களிலும் குறைந்த கூலியில் கண்கவரும்படியான விதமாய் வேலைகள் செய்து கொடுக்கிறோம். தவிர நாங்களே உங்கள் மனதிற்கு பிடித்த நல்ல கற்களையும் வாங்கிக்கொடுக்கிறோம். இதர பொன் வெள்ளி வேலைகளும் மெடல்களும், என்கிரேவிங் வேலையும் செய்து குறித்த காலம் தவறாமல் கொடுக்கின்றோம். எங்களிடம் ஒருதரம் ஆர்டர் செய்து பாருங்கள். ஒருமுறை ஒரு சிறிய ஆர்டர் கொடுத்துப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

ஆர்டர் வாங்கிக்கொள்ளும் நேரம் காலை 7-மணி முதல் 8-30-மணிவரையில்.

ராஜாத்தினம் பிரதர்ஸ்,

நகைவேலைக்காரர்கள், நெ. 8, இரண்டாவது தெரு, புதுப்பேட்டை, மதராஸ்,

---

## இரகஸ்யம்.

ஒரு யோகீஸ்வரரால் அனுக்கிரகம் செய்யப்பட்டது அநேகம் பிரபுக்கள் பரீக்ஷை செய்து நற்சாட்சி பத்திரங்களும் அளித்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அதிக பிரயோஜனத்தைத் தரத்தக்கதாதலால் இது உலோகோபகாரமாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது தளர்ந்த தேகத்தைக் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு வலுவேற்றித் தேகபுஷ்டி கை, கால், இடுப்பு, மார்பு, முதலிய உருப்புகளின் வலிவு, சுறுசுறுப்பு, சந்தான உற்பத்தி, பேரானந்தம், மனோதைரியம் முதலியவைகளை உண்டுபடுத்தி, மெலிந்து தளர்ந்துபோன வயோதிகரும் வாலிபருடைய சகல சுகங்களையும் அனுபவிக்கச் செய்யும் மேகவெட்டை, வாய்வு, மலபந்தம், பசியின்மை முதலிய வியாதிகளை நீக்கி, தேகாரோக்கியத்தை உண்டாக்கிவிடும். ஒரே வேளை மருந்தில் சொப்பனஸ்கலிதம் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கித் தாதுவை வஜ்ஜிரத்தைப்போல் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு முறுக்கேற்றி ரகஸிய இன்பத்தை உண்டாக்கி விடுமென்பது உண்மை. இதற்குப் பத்தியமில்லை. புட்டி 1-க்கு இரண்டு ரூபாய் மூன்று புட்டி வாங்கினுல் தபால்செலவு கிடையாது. இவ்வற்புத சஞ்சீவியின் பெயர் கற்பகவிந்தாதி லேகியம். வேண்டுவோர்,

மானேஜர், கற்பக மெடிகல் ஹால்,

கவரைப்பேட்டை போஸ்ட், S. இந்தியா என்னும் விலாசத்திற்கு எழுதவும்.

129806


# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - ௨. | விபவஹூ - அற்பிசிமீ | பகுதி - ൧ |
|---|---|---|


OFFICE OF THE REGI... No. ... 5-NOV ... MADR

முருகன் துணை.

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பா
லருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### செங்குந்த முதலிமார் மடங்கள்

நம்முன்னோர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஒழுக்கத்திலும், கடவுள் பக்தியிலும், காருண்யத்திலும் மேம்பட்டு விளங்கினார்கள் என்பதற்குக் கந்தபுராணம், ஈட்டியெழுபது முதலிய நூல்கள் மாத்திரந்தான் ஆதாரமென்று பலர் எண்ணியிருக்கின்றனர். புராணங்களைப் பிரமாணமாகக் கொள்ளுதல்கூடாதுஎன்னும் கொள்கை நம் நாடெங்கும் பரவிவரும் இக்காலத்தில், மேற்கூறிய நூற்களை ஆதாரமாகக் காட்டுவது போதாதென்றே கருதுகிறோம். நமது பண்டைப் புகழை விளக்கக்கூடியதும், சரித்திர ஆராய்ச்சி முறையில் நோக்குங்கால் எவரும் நம்பக்கூடியதுமான வேறு ஆதாரங்களுமுண்டு. அவை பல நூற்றாண்டுகளுக்கு முன் நம்மூதாதைகளால் கட்டப்பட்டுள்ள மடங்களும், பழைய பட்டயங்களும், கல்வெட்டுக்களுமாம்.

இவற்றுள் பட்டயங்களைப் பற்றியும், கல்வெட்டுக்களைப்பற்றியும் வேறொருசமயம் விளக்குவோம். விசேஷ புண்ணியத்தலங்களெனக் கருதப்படும் ஒவ்வோரிடங்களிலும் முதலிமார் மடங்கள் இருப்பதை இன்றுங் காணலாம். நமது மடங்களில்லாத தலங்களும் சில உளவேஎனின், ஆழ்ந்து விசாரித்துப் பார்ப்போமாயின் ஆண்டும் ஒரு காலத்தில் இருந்து சில வருஷங்களுக்குமுன் நம்மவர்களின் அஜாக்கிரதையாலும், அசிரத்தையாலும் பிறரால் கைப்பற்றப்பட்டனவென்றே விளங்கும். நமது மடங்களில் பெரும்பாலும் ஓதுவார் அல்லது பண்டாரம் என்னும் இனத்தவர் குடியிருந்து மடத்துவேலையையும் பார்த்துவருகின்றனர். வியாபாரத்தையும் தொழிலையும் கவனிக்கவேண்டியவர்களாயிருக்கும் நம்மவர்கள் ஒழிவின்மையால் பிறரிடத்து நம்பிக்கை வைத்து விடுத்திருக்கின்றனர். நமது அஜாக்கிரதையையும் ஒற்றுமையின்மையையும் நன்குணர்ந்த அவருட்பலர், மடங்களைத் தம்முடையன வாக்கிக் கொள்ள முயன்று சிலர் சித்தி பெற்றுமிருக்கின்றனர்.

நம்மவர்கள் வசத்திலிருந்துவரும் மடங்களைக் கவனித்துப் பார்க்கின் அவை பெரும்பா

லும் கோயிலுக்கு அணித்தாயும், சமீபத்தில் புதிப்பிக்கப்பட்டவை போக, மற்றவைகள் மிகப் பழைய கட்டடங்களாயு மிருக்கக் காண்போம். இதுவே நம்முன்னோரது பக்தியையும், ஊக்கத்தையும், கட்டுப்பாட்டையும் விளக்கக்கூடிய சான்றுகளுள் ஒன்ருகும். இராமேச்சுரம், திருக்குற்ருலம், பாபவிநாசம், திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழநி முதலிய க்ஷேத்திரங்களிலுள்ள மடங்களைப்பற்றிப் பின்னர்த் தனித்தனியே எடுத்துக் காட்டுவோம். சில க்ஷேத்திரங்களிலுள்ள மடங்கள் அவ்வவ் க்ஷேத்திரங்களைச் சூழ்ந்துள்ள கிராமங்களில் வதியும் செங்குந்தர்களால் பரிபாலிக்கப் பெற்றுவந்தாலும், பெரும்பாலும் செங்குந்த பொதுமக்களால் எல்லாச் செங்குந்தர் பொது நன்மைக்கெனவே ஏற்படுத்தப்பட்டனவென்றே தெரிகிறது. ஒரு மடத்தைப் பரிபாலித்துவரும் சில கிராமச் செங்குந்தர்கள், அம்மடத்தின் பரிபாலனத்திற்கும் உற்சவாதிகளுக்கும் தேவையான பொருள் தருவதன்றி, அவர்களுக்கு நம் மரபினரது தர்மங்களையும் சுதந்தரங்களையும் பிறர் கைக்கொள்ளாதவாறு பாதுகாத்துவரும் சிறப்பான சுதந்தரம் உண்டென்பதை யாரும் மறுக்கமுடியாது. அன்னோரது குலாபிமானத்திற்காகச் செங்குந்த உலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

சில கிராமத்துச் செங்குந்தர்கள் தமக்கெனவே ஏற்படுத்திப் பரிபாலித்துவரும் மடங்களும் பலவுள. அவற்றிலும் தூரதேசங்களிலிருந்து யாத்திரைக்காக வரும் செங்குந்தர்கள் தங்கியிருக்க இடந்தருகின்றனர். எனவே, நம்மவர்கள் மடங்கள் யாவும் பொதுவாகச் செங்குந்தர் நன்மைக்கெனவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்று தெரிகிறது. ஆகையால் முதலிமார் மடங்களும், அவற்றின் மூலமாய் நடத்தும் தர்மங்களும், உற்சவங்களும் பிறரால் கைப்பற்றப்படாதவாறு பார்த்துக்கொள்வது ஒவ்வொரு செங்குந்தரும் தமது கடமையெனக் கருதல்வேண்டும்.

### இராமேச்சுரம் முதலிமார் மடம்.

சைவர்களால் காசி நகருக்குச் சமமாகக் கருதப்படும் இந்த க்ஷேத்திரத்தில் தெற்கு மாடவீதி தென்னண்டை வாடையில் கிழ்ப்பக்கத்தில் கிழக்கு மேற்கில் தற்போது 32 அடி அகலமுடையதாய் வடக்கே தெற்குமாடவீதியி லிருந்து தெற்கே கடல் வரையிலுள்ள இடம் தற்போது செங்குந்தர்களுக்குப் பொது. இதற்கு முதலிமார் மடம் என்று பெயர். இதன் கதவிலக்கம் ₁/₇₉. மிகப் பழமையான இம்மடத்துச் சம்பந்தமான விஷயங்களில் பிரபலவியாபாரியும் பாங்கருமாகிய தென்காசி திரு. T.P.K. ஆறுமுகமுதலியார் அவர்கள் வெகு பிரயாசை யெடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

வீ. இராமநாத ஓதுவார் என்றவர் மடத்தில் குடியிருந்துகொண்டு திருக்கண்சாத்து முதலியவற்றைச் செய்து வருவதாக ஒப்புக்கொண்டு 16-6-19 ; 5-ல் ஒரு அக்ரீமெண்டு எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுத்திருக்கிருர். அந்த ஷை தென்காசி முதலியாரிடமிருக்கிறது. ஓதுவார் சென்ற வருஷம் காலமாய்விட்டனர். உடனே வேருெரு ஓதுவார்தான் இறந்தவரது மாப்பிள்ளை என்றும், இறந்தவரிடமிருந்து மடத்தைத்தான் கிரயம்வாங்கி யிருப்பதாயும் சொல்லிக்கொண்டு மடத்தைக் கைவசப்படுத்தப்பார்த்தனர். ஆனல் இராமேச்சுரத்திற்கு 2 மைல் தூரத்திலுள்ள மெய்யன்புளி முதலிமார்கள் விழிப்பினல் அவரது சூழ்ச்சி பயன்படாமற் போயிற்று. 27-7-28உ மு. சொக்கலிங்கம் பிள்ளை என்பவர் ஒரு குடிக்கூலி அக்ரீமெண்டு எழுதிக்கொடுத்துத் தற்போது அதில் இருந்து வருகிருர்.

இம்மடத்திற்கு வருவாயுமில்லை, யாத்திரைவாசிகள் தங்கியிருப்பதற்கு இடவசதியுமில்லை. அது ஒரு கேவலமான குடிசையாக விருக்கிறது. நம்மவரிடத்துத் தற்போது ஒற்றுமையின்மையும், பக்தியின்மையும், குலாபிமானமின்மையும், சுயநலமும் நிரம்பக் குடிகொண்டிருக்கின்றன வென்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ? ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான செங்குந்தர்கள் இத்தலத்திற்குப் போய்க்கொண்டுதானிருக்கிருர்கள். ஆயினும் மடத்தைக் கவனிப்பார் ஒருவருமில்லை. அனுவசியமான வம்பு வியாச்சியங்களுக்கும், வேடிக்கை உற்சவங்களுக்கும், நாடகங்களுக்கும் ஒவ்வொரு செங்குந்த கிராமங்களிலும் ஏராளமான பொருள் செலவிடப்படுகிறது. ஆகையால் நம்மவரிடத்துப் பணமில்லையென்று சொல்லமுடியாது. இராமேச்சுரத்தைப் போன்ற விசேஷ க்ஷேத்திரங்களில் கோயிலுக்கு இவ்வளவு அணித்தாய் இடங்கிடைப்பது மிகவும் அருமை. முன்னேர் அரிதிற்தேடி வைத்தவற்றையும் காப்பாற்ருது கைநழுவவிட்டுக்கொண்டு வருகிருேம்.



நாம் சுற்றுப்பிரயாணஞ் செய்தபோது இம் மடத்திற்காக இரங்கோன் செங்குந்தவியாபாரிகள் மகமையாகவும் நன்கொடையாகவும் பொருள் திரட்டி இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஒரு கனவானிடத்தில் கொடுத்துவைத்திருப்பதாகக் கேள்விப்பட்டோமென்று முன்னமே தெரிவித்திருக்கிருேம். இரங்கோனிலிருந்து வெளியாகும் 'சுதந்தரன்' பத்திரிகை மூலமாக இம்மடத்து நிதி பரமக்குடி திருவாளர் ம. ப. இராமசாமி முதலியாரிடம் இருப்பதாகத் தெரிகிறது. மதுரையிலும், பரமக்குடியிலும் இவ்வாறே சிலகனவான்கள் எம்மிடம் சொல்லியிருக்கின்றனர்.

எமது சுற்றுப் பிரயாணத்தில் பரமக்குடி சென்றிருந்தபோது திரு. ம. ப. இராமசாமி முதலியார் அவர்கள் இல்லத்திற்ருன் தங்கியிருந்தோம். அவ்வூரில் கிளைச்சங்கஸ்தாபிதகும்பொருட்டுக் கூடிய பொதுக்கூட்டத்தில் யாம் இராமேச்சுரமடத்தைப் பற்றியும் அதற்காக இரங்கோன் வியாபாரிகளால் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் நிதியைப்பற்றியும் பிரஸ்தாபித்தோம். அப்போது திரு முதலியாரவர்கள் தம்மிடத்திலாவது அல்லது வேறுயாரிடத்திலாவது மடத்து நிதி இருப்பதாகச் சொல்லவில்லை. பொதுவாக நம் குலமுன்னேற்ற விஷயத்திலும், சிறப்பாக மேற்படி மடத்து விஷயத்திலும் மிகுந்த ஆர்வங்காட்டிய திரு முதலியார் அவர்கள் இம்மடத்துச் சம்பந்தமான நிதி யாரிடத்திலும் இருப்பதாகத் தெரியவில்லையென மற்ருெரு சமயம் சொல்லியிருக்கிருர். இக்காரணம்பற்றியே அப்பணம் யாரிடத்திருக்கிறதென்பதற்கு எமக்குத் தகுந்த ஆதாரம் கிடைக்கவில்லையென்று கூறினேம்.

ஆயினும், பொது நன்மைக்காக வைக்கப்பட்டுள்ள அப்பொது நிதியை வெளிப்படுத்தி அதை மேற்படி மடச்சம்பந்தமாக உபயோகப்படுத்துவதற்கான முயற்சி செய்து வருகிருேம். இவ்விஷயமாகக் கூடியசீக்கிரம் நமது சங்கப்பிரதிநிதியை இரங்கோனுக்கு அனுப்புவதாகவும் உத்தேசித்திருக்கிருேம்.

### முதலாவது செங்குந்தர் மகாநாடு

ஈரோட்டுச் செங்குந்த மகாஜனங்களுக்கும் நாட்டாண்மைக்காரருக்கும் ஏற்பட்டிருந்த ஒரு விவாதத்தை முடிவுசெய்யும்பொருட்டு 7-10-28 முதல் 10-10-28 வரையில் ஈரோட்டைச் சூழ்ந்த 32 கிராமங்கள் கூடிய பூந்துறை செங்குந்தர் நாடு ஈரோட்டில் கூடிற்று. அக்கூட்டத்திற்கு ஈரோட்டு மகாஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்க நமது தலைச்சங்கப் பிரதிநிதிகளாகத் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களும் திரு. பி. செ. மாணிக்கவாசகமுதலியார் அவர்களும் சென்றிருந்தார்கள். விவகாரம் பூர்த்தியானதும் ஷை மகாநாட்டில், நமது மாகாண மகாநாடு கூடவேண்டியதின் அவசியத்தைப்பற்றியும், முதலாவது மகாநாடு கோயம்புத்தூர் ஜில்லாவில் கூடவேண்டுமென உத்தேசித்திருப்பதன் காரணங்களையும், சங்கப் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர். அப்போது நமது முதலாவது மகாநாடு அடுத்த தைமாதம் முதல்வாரத்தில் ஈரோட்டில் கூடவேண்டுமென அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பெற்றது.

மகாநாட்டிற்கு வரவேற்புச் சபையும் 12—10—28-ல் ஈரோட்டு சங்கத்தின் கூட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் விவரங்களை மற்ருேர் இடத்தில் காண்க.

முற்காலத்தில், அதாவது நம் முன்னேர்கள் மேன்மையான நிலைமையில் இருந்த காலத்தில் நம்மினத்தவர்க்குள் ஏற்படும் வழக்கு முதலியவற்றைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுக் கூடிவந்த நாட்டுக்கூட்டங்களைப்போலல்லாமல், தற்காலம் பல துறைகளிலும் பிற்போக்கடைந்து, ஒற்றுமையற்று மிகக்கேவலமான நிலையிலிருந்துவரும் நம்சமூகத்தை என்னென்ன முறையில் முயன்று முன்னேற்றத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று யோசித்துத் தீர்மானிக்கும் பொருட்டே இம்மகாநாடு முதன்முதல் கூடுகிறதாகையால், இதில் ஒவ்வொரு செங்குந்தரது ஒத்துழைப்பும் அவசியமாக இருக்கிறது. ஆகையால் உண்மைச் செங்குந்தர்கள் வதியும் ஒவ்வொரு பட்டணங்களிலும் கிராமங்களிலுமிருந்து திரளான சகோதரர்கள் டெலிகேட்டுகளாக விஜயஞ்செய்து மகாநாட்டைச் சிறப்புறச் செய்வார்களென நம்புகிருேம்.

மகாநாடு கூடும் சமயத்தில் நமது சங்கச் சட்டப் பிரகாரம் தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வருஷப் பொதுக் கூட்டமும் கூடும். இதுவரையில் தலைச்சங்கக் கட்டணத்தைச் செலுத்தி அதன் அங்கங்களாகச் சேராத கிளைச்சங்கங்களின் கட்டணத்தைக் கூடிய சீக்கிரம் செலுத்தும்படி சங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஞாபகமூட்டுகிருேம். தலைச்சங்கத்தின் அங்கங்களாகச்

கட்டணம் செலுத்திச் சேர்க்கப்பட்ட கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்குத்தான் தலைச் சங்கப் பொதுக்கூட்டத்தில் ஓட்டுரிமை உண்டு. (சென்ற வருஷத்திய மார்கழிமாதத்திய செங்குந்த மித்திரனில் பிரசுரித்துள்ள சட்டதிட்டங்களைப் பார்க்க). அப்பொழுது கூட்டத்தில் தலைச்சங்க உத்தியோகஸ்தரைத் தேர்ந்தெடுத்தல், புது வருஷத்து முயற்சிகளைத் தீர்மானித்தல் முதலியவை நடைபெறும்.

மகாநாடு, தலைச்சங்கப்பொதுக்கூட்டம்ஆகிய இரண்டும் ஒரே இடத்தில் தனித்தனியே முன்னும் பின்னுமாகக் கூடும். மகாநாட்டுக் கூட்டத்திற்கு ஒவ்வொரு செங்குந்த கிராமத்திருந்தும் (கிளைச்சங்கம் இருந்தாலும் இல்லாவிட்டாலும்) பல டெலிகேட்டுகள் வரலாம். ஆனால் அதே இடத்தில் கூடும் தலைச்சங்கப் பொதுக்கூட்டத்தில் கிளைச்சங்கங்களிலிருந்து தேர்ந்தனுப்பப்படும் (ஒரு கிளைச்சங்கத்திற்கு இரண்டாக) பிரதிநிதிகளுக்கு மாத்திரம் ஓட்டுக் கொடுக்கும் உரிமையுண்டு. மற்ற விபரங்கள் சங்கத்தின் சட்டதிட்டங்களிற்காண்க.

# ஆராய்ச்சிப் பகுதி

## ஈட்டி யெழுபது.

### க. ஒட்டக்கூத்தர்.

பெரும் புலவர்களது சரித்திரங்களும், அரும்பெறல் நூல்களது குறிப்பும், வருணம், ஜாதி, நிலை இவற்றின் பெருமையும், நமது நாட்டில் பெரும்பாலும் கர்ண பரம்பரையாகவே வழங்கி வந்தனவென்று மேலே காட்டினோம்.

தொன்றுதொட்டு இப்பரதகண்டத்தில் வழங்கிவந்த ஜாதி ஏற்பாடு ஒருண்மையான கருத்தைத் தழுவித் தொழிற் பெருக்கத்தையும், திரவிய விருத்தியையும், தேச ஆக்கத்தையும் பற்றியே நடைபெற்று வந்தது. ஜாதியாவது ஒரு நிகரனவாகிய பல பொருட்கும் பொதுவாவதோர் தன்மை. அவ்வச்சாதியார் அவ்வவர்க்குரிய சுதந்திரங்களை யுணர்ந்து அவ்வாற்றின்னின்று பிறருக்குப் பேருபகாரிகளாய்த் தத்த மக்கமைந்த ஒழுக்கங்களின் நீங்காது தத்தம் சமயாசாரங்களை அனுஷ்டித்து இம்மை,மறுமை, வீடு பேறுகளைப் பெற்றுவந்தனர். ஓர் வருணத்தார் மற்றோர் வருணத்தாரை ஏககாரணத்தை முன்னிட்டும் புறக்கணித்துவருவாரல்லர். இஃது இங்ஙனமாக, பூர்வ காலத்தில் முதலாளர்க்கும் தொழிலாளர்க்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டுதற்கு ஏற்பட்ட வலங்கை இடங்கை யென்னும் நிலை வேறுபாடு இடைநின்ற காலத்தே ஜாதிகளினும் புகுந்து சிறிது கலக்கஞ் செய்துவிட்டது. அன்றியும் மஹாராஷ்டிரர் சோழமண்டலத்தை அரசாண்ட காலத்தில் (1675-1739) அவர்கள் ஏற்படுத்திய பதக்கத்தார் காவற்காரர் என்னும் அரசிறை வர்க்கத்தாருள் சிறிது ஜாதிபற்றிய கலக்கத்தை விளைத்தது. இக்கலக்கம் காஞ்சீபுரம் முதலிய புண்ணிய பதிகளில் வசித்தோர்க்கும் எட்டிவிட்டது அது முதலாக ஓரினத்தவர் மற்றோரினத்தவரைக் குறைவு படுத்தற்குத் தலைப்பட்டு விட்டனர். மேலோர் தாழ்ந்தோர் என்னும் எண்ணங்கள் உண்டாகவே ஒவ்வோரினத்தவரும் தங்கள் இனத்தவர்க்குள்ள மேம்பாட்டைக் கருதும் அளவின் அமையாது மற்றை இனத்தவரை இகழ்ந்து கூறுதற்கேற்ற நூல்களையும் ஊதிகங்களையும் ஏற்படுத்திக் கொண்டனர்; தத்தமக்கு இஷ்டமான பட்டங்களை வைத்துக்கொண்டு வரம்புகடந்து பிறரை அருவருக்கலாயினர். இதன்மேலும் அச்சுவாகனந்தோன்றி பல வினோத ரசமஞ்சரிகளை எழுதி வெளியிடலான போது, பாடசாலையில் வாசிக்கும் மாணவர்கள் அவ்வினோதக் கதைகளை வினோதமானவையென என்னாது உண்மை விருத்தாந்தங்களாகக் கருதிவிட்டனர். இவ்வித வினோத வரலாற்று முறைகள் ஒட்டக்கூத்தரது உண்மைச் சரித்திரத்தையுஞ் சிறிது மாறுபடுத்திவிட்டன. அப்புலவர் சிகாமணி யியற்றிய பல நூல்களை எழுத்தெண்ணிப் படித்த பண்டிதர்கள் அன்றிச் சாமானியர்கள் அவ்வினோதக் கதைகளைப் பொழுது போக்குக்காக எழுதப்பட்டவையென்று துணிவார்களோ? இதற்கிடையில் அந்தந்த நாட்டிலுள்ளவர்கள் தங்கள் தங்கள் நாட்டிலே, தங்கள் தங்கள் ஊரிலே, தங்கள் தங்களுக்கு வேண்டிய புலவர்கள் பிறந்தார்களென்று



பத்திரிகைகளிலும் எழுதலாயினர். பத்திரிகைகளைப் படிப்போர் பலரானமையால் அவரவர்கள் படித்த அளவிலேயே நம்பிவிட்டனர். கூத்தர் என்னும் ஜாதிப் பெயரை ஒட்டக்கூத்தரோடு இணைத்து எழுதினவர் எத்தனைப்பேர்? கூத்தருக்கு விட்ட பழைய மானியங்களை ஒட்டக்கூத்தரோடு பொருத்தி மயங்கினவர் எத்தனைப்பேர்? சிவபெருமானுடைய நாமங்களுள் ஒன்றாகிய கூத்தன் என்பதைப் பெற்ற பெரியார் பேரானும் சிவபெருமான் பேரானும் வழங்கிவந்த ஊர்களையும் பேர்வழிகளையும் ஒட்டக்கூத்தரோடு இணைத்து மாறுபட்டவர் எத்தனைப்பேர்? ஒட்டக்கூத்தர் என்னும் பேருக்கே சப்தார்த்தம் பலவாறு கூறினர் எத்தனைப் பேர்! இந்நிலைமையில் ஒரு புலவருடைய சரித்திர சம்பந்தமாகச் சில உண்மைகளைக் காணுவது எங்ஙனம். பழம்புலவர்பாற் செவ்விதிற் கேட்ட நடுநிலையுள்ளார் வாய்ச் சொல்லும் சில மெய்ந்நூற் கூற்றுக்களுமே ஆதாரமாதல் வேண்டும். நவீன காலத்தில் ஒரு சார்பாக எழுதப்படும் நூல்களில் உண்மை அறிதல் இயலாது. அந்நூலாசிரியர்களிற் சிலர் ஆராய்ச்சி யென்ற தலைப்பிற் பலவாறு எழுதி வருகின்றனர். அவர்களுக்குக் கர்ண பரம்பரைகளாற் பயனில்லை, ஒரு பெரும் புலவர் எம்மைப் பார்த்துச் சீகாழியில் எட்டாந் திருநாளில் சமணரைக் கழுவேற்றும் உற்சவம் நடக்கின்றதே, இதற்கு ஆதாரமென்ன? சம்பந்தர் தமது தேவாரத்துள் எங்கேனும் இதனைக் குறிக்கின்றாரா? நம்பியாண்டார் நம்பிகளும் சேக்கிழாரும் கூறுவதை எப்படி நம்புவது? ஒத்தூர் முதலிய இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் எப்படி ஆதாரமாகும்? சம்பந்தர் காலத்திருந்த சரித்திராசிரியர் யாரேனும் இதனைக் கூறினாரா? கர்ண பரம்பரைகளுக்கு நூலாதாரம் வேண்டாமா என்று கேட்டார். அந்தக் கேள்விக்கு யாம் என்ன விடை கூறுவது? சும்மா இருந்துவிட்டோம். அகச்சான்றில்லாவிடினும் உண்மையான பாரம்பரியங்களை உள்ளனவென்றே நம்புதல் வேண்டும், கற்பிதமான சில கதைகளை நம்புதற்கு ஆவஸ்யமே இல்லை. ஆதலால் இப்போது ஒட்டக்கூத்தரைப் பற்றிக் கர்ண பரம்பரைக் கதைகளையும், அவற்றிற்கு அவர் மெய்ந்நூல்களிலுள்ள அகச்சான்றுகளையுமே ஈங்கு விவரிக்கத் தலைப்படுகின்றோம். சான்றோர் அவற்றுள் சான்ற விஷயங்களையே ஏற்றுக் கொள்ளுவார்களாக.

அகச்சாட்சியாக நமக்குக் கிடைக்கும் ஆதாரங்கள் ஈட்டி யெழுபது, நாலாயிரக் கோவையில் சில செய்யுள், அரும்பைத் தொள்ளாயிரம், விக்கிரம சோழனுலா, அனபாயன் குலோத்துங்கன் உலா, இராஜராஜனுலா, தக்கயாகப்பரணி, தமிழ் நாவலர் சரிதையிற்கண்ட சில செய்யுள் என்பன. இந்நூல்கள் யாவும் கூத்தர் பாடியவையென்று 1826-ம் வருஷம் ஐப்பசி௴ 6வ காஞ்சீபுரத்திற் கூடிய பரிஷத்தில் நேரினும், லிகித மூலத்திலும், 1. பாளையங்கொட்டை-அம்பலவாணக் கவிராயர், 2. சண்முகநாதக் கவிராயர், 3. வயிரவநாதக் கவிராயர், 4. திருப்பாற்கடல்நாதக் கவிராயர், 5. ஊரக்காட்டுச் சுவாமிநாதக் கவிராயர், 6. தோனூர்-முத்துசாமிக் கவிராயர், 7. பன்றிக்குளம்-சுப்பிரமணியக் கவிராயர், 8. சென்னைப்பட்டணம்-காலேச ராமச்சந்திரக் கவிராயர், 9. கொட்டையூர்-பண்டாரம் வைணப்ப உபாத்தியாயர், 10. சென்னை-சதாசிவ முதலியார், 11. சேஷாசல முதலியார், 12. திருத்தணிகை-விசாகப் பெருமாளையர், 13. சரவணப் பெருமாளையர், 14. சென்னை அகோர சாஸ்திரியார், 15. தாண்டவராய முதலியார், 16. இராமானுஜ கவிராயர், 17. இலங்கை வட்டுக்கோட்டை-மயில்வாகன சோமசேகரம் பிள்ளை, 18. கும்பகோணம்-இன்னமுதம் பிள்ளை, 19. வேதியபுரம்-அமுதலிங்க மென்கிற அண்ணாப் பிள்ளை, 20. தஞ்சாவூர்-மருதமுத்து உபாத்தியாயர் முதலியோர் தீர்மானித்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிறந்து விளங்கிய சிவஞான சுவாமிகளுக்கும் அவர் மாணாக்கர் பலவிருவருக்கும் பிறகு இப்புலவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் விளக்க முற்றவர்களென்பது யாவரும் துணிந்த துணிபு. சரசுவதி அந்தாதி, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், எழுப்பெழுபது, எதிர் நூல் என்னும் நான்கு நூல்களையும் பற்றி இவர்கள் கூறாதிருந்த காரணம் நமக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் இந்நூற்கள் அவர்கள் பார்வைக்கு எட்டாதிருக்கலாம். அன்றி, தாம் கூறிய மேற்கண்ட நூல்களின் பகுதியாக இவைகளைக் கருதி இருக்கலாம், எதிர் நூலென்னும் இலக்கண நூலைத் தங்கள் ஆராய்ச்சிக்கு ஏற்புடையதாக ஒப்புக் கொள்ளாதிருக்கலாம். எனினும், தற்காலத்துள்ள பெரியோர் அவற்றையும் தங்கள் ஆராய்ச்சிக்கு இணைந்ததாகக் கொள்கின்றனர்.

கல்வி கேள்விகளில் வல்ல கவியரசர்கள் ஒட்டக்கூத்தர் பிறந்த ஊர் சீகாழியென்று நெடுங்காலம் வழங்கி வந்ததனை மதுரைச் செந்தமிழ்ப் பத்திராசிரியர் தொகுதி 5. பகுதி 2. பக்கம் 112-ல் காணும் "கம்பனென்றுங் கும்பனென்றுங், காளியொட்டக் கூத்தனென்றுங், கும்ப முனியென்றும் பேர் கொள்வாரோ" என வரும் பாடலால் பலர் அறிவர். இதனுள் 'காளியொட்டக்கூத்த' னென்பது 'காழியொட்டக் கூத்த' னென்று பிரதி பேதங் காணப்படுகிறது. எனவே சீகாழியே கூத்தரூர் என்பது பெறப்படும். இவ்வாறன்றிக் 'காளியொட்டக் கூத்தன்' எனக் கொள்ளுமிடத்துச் சிறந்த பொருளின்மை காண்க. அன்றியும், 'ஒட்டக்கூத்தர் தாம்பாடிய தக்கயாகப்பரணியின்தொடக்கத்தே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைத் தம்குல தெய்வமாகக் கொண்டு வாழ்த்துதலும், அவரூர் அதுவேயாதல் வேண்டுமென்பதற்கு, ஒரு சான்றாகின்றது' என்று வரைந்திருக்கின்றார்கள். தொகுதி 4, பகுதி 8, பக்கம் 370, 371-ல் இதிற்குறித்த 'கம்பன்" என்று தொடங்கும் வெண்பா இருமுறை காட்டப்பட்டது. இவ்வெண்பா பாகவத புராணத்து இறுதியிலும், தொண்டைமண்டல சதகத்தினிடையிலும் எழுதப்பட்டது. இற்றைக்கு 22-ஆண்டுவரை கூத்தர் பிறந்த ஊரைப்பற்றி ஐயமே உண்டானதில்லை. அதன்பிறகே சோழநாட்டு மலரி என்ற கிராமத்தில் கிடைத்த சாசனம் ஒன்றால் அப்பத்திராசிரியரும் வேறு சில வித்துவான்களும் ஒட்டக்கூத்தர் சோழநாட்டு மணக்குடியிற் பிறந்தவரென்றும், மலரியிற் பிறந்தவரென்றும், கூத்தனூரிற் பிறந்தவரென்றும் விவகரித்து, அவரவர் கொள்கைக்கேற்பப் பல நியாயங்களைக் காட்டுகின்றனர்.

இவற்றுள் ஒன்றை நிர்ணயிப்பதன்முன், கூத்தர் எனனும் பெயர் ஒட்டக்கூத்தர், பகழிக்கூத்தர், ஆனந்தக்கூத்தர், வாணிதாசர், கூத்தர், திருவம்பலக்கூத்தர், அம்பலக்கூத்தர் என்னும் பல பெயர்களோடு ஒட்டிவரும் என்பதையும், கவிச்சக்கரவர்த்தி யென்னும் பட்டம் கம்பர், ஒட்டக்கூத்தர், திருவம்பலக்கூத்தர் என்னும் பல பெயரோடும் இணைத்து வழங்கப்படும் என்பதையும், காழி என்பது காளிபுரமென்பதன் நாமைஹ தேசமாகிய காளியென்பதன் சிதைவு என்பதையும், கூத்தரெனப் பெயர் பெற்றாருள் ஒட்டக்கூத்தா (1103-1200) காழியொட்டக்கூத்தரெனவும், வாணிதாசர் கூத்தர் (1185), நல்லிலம் கூததரெனவும், திருவம்பலக் கூத்தர் (1180) மலரிக்கூத்தரெனவும், அம்பலக் கூத்தர் (1400-1445) மணக்குடி அம்பலக்கூத்தரெனவும் வழங்கப்பட்டு வந்தனர் என்பதையும், ஓர்ந்து உணர்தல் வேண்டும். இவருள் வாணிதாசர் கூத்தர் இராமாடணத்தில் உத்தர காண்டம் பாடினார். மணக்குடி அம்பலக்கூத்தர் சமயப்பறறு இல்லாதவராதலின் காழித் தத்துவப் பிரகாசரால் ஆங்காங்குக் கண்டிக்கப்பட்டார். மலரிக்கூததா கவிச சக்கரவர்த்தியோடு பரமானந்த முனிவரால் தமது திருப்பதியில கலைமகள் சந்நிதியில் ஞானோபதேசஞ் செய்யப்பெற்று வாக்ச முனிவரென்னும் அபிஷேகத் திருநாமமுடையவராய்ச் சோம சம்புஞான சிவா இவர்களின் வழியே திரிலோசனர் அனுக்கிரகிதத திருவார்த்தைகளை யுணர்ந்து ஞானுமிர்தமெனனும செந்தமிழ்ச் சைவ முதல் நூலைப் பாடியருளித் திவ்ய பிரதிஷ்டை பெற்றார். இவரே யாவரும் புகழ்த்தக்க பரம சைவாசாரியா. ஒட்டக்கூத்தரும முற்கூறிய நூல்களை இயற்றிப் பெரும்பேர வாயநது கவிச சக்கரவர்த்தியானதுமன்றியும், உணமைச் சைவ நூல்களின சித்தாந்தமுற்றும் உணர்நது தக்கயாகப் பரணிக்கு ஆசிரியரானது மன்றியும், திருக்கோவையாருககுப் பேருரை அரும்பதத்துறகு மூல காரணராகவும் விளஙகினவா.

(தொடரும்.)

அ. பூ. இராஜு முதலியார்,
காலஞ்சென்ற நாட்டாண்மை பூரண முதலியார்
சுவீகார புத்திரர், சீர்காழி.



# குலதிலகர் பகுதி

## முத்துப் பண்டிதர்.

இராமநாதபுரம் ஜில்லாவைச் சார்ந்த மண்டலமாணிக்கம் என்னுமூரில் கருப்பண்ணமுதலியார் என்ற செங்குந்தர் ஒருவர் இருந்தார். அவர் செய்தவப்பயனாக அவருக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அக்குழவியின் ஜாதகம் யோகஜாதகமாயிருத்தல்கண்டு முத்துஎனப் பெயரிட்டனர். அவர் இளமையில் கற்கவேண்டியவற்றைக் கற்று அதற்குத்தக நின்று யாவராலும் நன்குமதிக்கப்பெற்று வந்தனர். அவரது பதினாறுமாண்டில் மாண்டவசங்கலிசித்தர் என்னும் ஒரு பெரியார் வந்து முத்து முதலியாரைக் கண்டு, அவர் மீது மிக்க அன்புபூண்டு அவருடன் மூன்றுநாள் தங்கியிருந்து அவரது அரிய குணங்களை உணர்ந்து அரிய உபதேசஞ் செய்தருளி, அவ்வூரின்கண் அழிவுற்றிருந்த கைலாசநாதர்கோயிலை ஜீரணோத்தாரணம் செய்யக்கடவை யெனக் கட்டளையிட்டுப் போய்விட்டனர். அதுமுதல் முத்து முதலியார், காருண்யம் பொறை முதலிய நற்குணங்களால் முன்னும் மேம்பட்டு, பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதலே இறைவனிடத்தில் அன்பு செலுத்தியதாகும் என்னும் உண்மை கைவரப்பெற்று, அதைஅநுஷ்டானத்தில் கொண்டுவருதற்கு முக்கிய சாதனமாயிருப்பது வைத்தியமே என உணர்ந்து, அத்துறையில் வல்லுநரையடுத்து அதிற்றேர்ச்சிபெற்றுத் தமது 20 ம் ஆண்டுமுதல் வைத்தியஞ் செய்யத் தொடங்கினர். இதனால் இவரை முத்துப்பண்டித முதலியார் என அழைக்கலாயினர்.

இவரது புகழ் நாளடைவில் தேசமெங்கும் பரவலும், இராமநாதபுரம் தேவகோட்டை முதலிய இடங்களிலுள்ள பிரபல பிரபுக்களாலும் வியாபாரிகளாலும் வைத்தியத்தின் பொருட்டு வரவழைக்கப்பெற்று, இராமநாதபுரம் இராஜாவாகிய முத்துராமலிங்கதுரை ராஜா, சமஸ்தான மானேஜர் பொன்னுசாமித் தேவர், மதுரை மீனாக்ஷிசுந்தரேசர் தேவஸ்தான தர்மகர்த்தராயிருந்த நாகஞ்செட்டியார் முதலியவர்களாலும் நன்கு மதிக்கப்பெற்று வந்தனர். தேவகோட்டை கருப்பனானி செட்டியார் மனைவியாரின் மகோதரக் கட்டியையும் வெகு லேசில் போக்கினர்.

மாடதேவதை வசியக்காரனாகிய ஒரு ஆதித்திராவிடன் தேவகோட்டைக்கு வந்து அங்குள்ள யாவரும் தன்னை வணங்கித் தன் சொற்படிச் செய்து ஏமாற்றி வந்தான். நமது பண்டிதர் தேவகோட்டைக்குச் சென்றபோது அவனைப் பார்த்தும் மற்றவர்களைப்போல் வணங்காதிருந்தனர். அதுகண்டு கோபங்கொண்டு 'பார்த்துக்கொள்ளுகிறேன்? எனக் கருவினான். இதையறிந்த செட்டியார் பண்டிதருக்கு என்ன நேருமோவென பயந்திருந்தனர். பண்டிதரோ அவனது வல்லமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருந்தும், சிறிதும் அஞ்சாது தமதிருக்கை சென்று நிஷ்டையிலிருந்தார். பண்டிதருக்குத் தீங்கு செய்ய நினைத்த மாடதேவதை வசியக்காரனது கைகால்கள் மறுநாள் மடங்கின. இதனால் மந்திரவாதி நாணமும் திகிலும்கொண்டு பண்டிதரிடம் வந்து அவரைக்கண்டு வணங்கித் தான் அறியாமற் செய்த குற்றத்திற்காக மன்னித்தருளவேண்டு மென பிரார்த்தித்தான். பண்டிதர் அவனைப்பார்த்து, 'நீ தேவகோட்டையை விட்டு வெளியே போய்விடுவதன்றித் தேவதை வசிய பலத்தால் எவருக்கும் எவ்வகைத் துன்பமுமியற்றுவதில்லை என வாக்களிப்பாயாயின் உனக்குற்ற நோய்தீரும்' என்றார். உடனே அவன் அதற்குடன்பட்டுப் பண்டிதரைப் பல தடவை வணங்கிப் போய்விட்டான். இதனால் இவரது புகழ் முன்னினும் பன்மடங்கு அதிகரித்தது.

முத்துப்பண்டிதர் இங்கிலையிலும் தமது குருவாகிய சங்கிலிசித்தர் ஆணையை மறவாது மண்டலமாணிக்கத்தில் சிலனயிருந்த ஸ்ரீ கைலாசநாதர் கோயிலை ஜீரணோத்தாரணம் செய்யவேண்டிய முயற்சி செய்து வந்தனர். இராமநாதபுரம் சமஸ்தான மானேஜராகிய பொன்னுசாமித் தேவரவர்கள் திருப்பணிக்குக் குலசேகர நல்லூர் என்கிற பொம்மகோட்டையிலிருந்து கல்லுமாக உதவினார்கள். பண்டிதர் தாம் வைத்தியத்தால் பெற்ற பொருளைக்கொண்டு திருப்பணியை முற்றுவித்தனர். முத்துப்பண்டிதர், பொன்னுசாமித்தேவர் ஆகிய இவ்விருவரது

உருவச் சிலைகள் ஷை கைலாசநாதர் கோவிலில் கற்றூண்களில் அமைக்கப் பெற்றிருப்பதன்றி, அன்னார் பெயர்களும் பொறிக்கப் பெற்றிருக்கின்றன.

மண்டலமாணிக்கம் சிறுதேட்டுத் திசைக்கால் (60 ஏக்கர்), கரிசெக்குளம், ஐயனூர்குளம், திருவத்தேந்தல் ஆகிய நான்கு கிராமங்கள் ஸ்ரீ அருப்பவளநாயகி சமேதராய இக்கைலாசநாதர் தேவஸ்தான பரிபாலனத்திற்காக மானேஜர் பொன்னுசாமித்தேவர் அவர்கள் முயற்சியால் 40 வருஷம் கவலாக (சொற்பதீர்வைக்கு) விடப்பட்டன.

பொதுஜனங்களால் முத்துப்பண்டிதரென்றும், அவரது உண்மை நிலையை யுணர்ந்த அன்பர்களால் மூத்து ஞானியர் என்றும் சொல்லப் பெற்றுச் செங்குந்த குலதிலகமாய் விளங்கிய பெரியார், 'சர்வம் சிவமயம்' என வுணர்ந்து துன்புறும் உயிர்கட்கு அன்புடன் அரும்பணி யாற்றி ஸ்ரீ கைலாசநாதருக்குத் தொண்டு செய்து நெடுநாள் வாழ்ந்திருந்தனர்.

அவரது 86-வது வயதில் அழகர் உற்சவத்திற்குச் சென்று, மதுரைச் சொக்கலிங்கப் பெருமானையும் அங்கயற்கண்ணம்மையாரையும் தரிசித்துக்கொண்டு ஒருவாரம் மதுரையிலிருந்து தமது ஊராகிய மண்டலமாணிக்கத்திற்கு ஜயவருஷ சித்திரைமீ 22உ வந்து ஸ்ரீ கைலாசநாதரையும், ஸ்ரீ அரும்பவளநாயகியாரையும் சேவித்துத் தமது வீட்டை படைந்து, அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டை படைந்தனர்.

இப்பெரியாரது புத்திரராகிய கைலாச பண்டித முதலியார் தம் தந்தையாரைப்போலவே இருவகைத் தொண்டையும் இனிதாற்றி வந்ததன்றி ஷை தேவஸ்தான பரிபாலனத்திற்காக சில பூஸ்திதிகளும் வாங்கிவைத்தனர்.

இக்கைலாசபண்டித முதலியாருக்கு இரண்டு புத்திரர்கள் உண்டு. அவர்களுள் மூத்தவராகிய திரு. முத்துப்பண்டித முதலியார் என்பவர் தற்போது தம் முன்னோரைப் பின்பற்றி ஷை கைலாசநாதர் தேவஸ்தான தர்மகர்த்தாயிருந்து திருத்தொண்டாற்றி வருவதுடன் வைத்தியத்தை விருத்திசெய்து பிரபல வைத்தியசிகாமணியாகவும் விளங்கிவருகின்றனர். இவர், தெய்வபக்தி, சாந்தம், பெருந்தன்மை முதலிய எல்லா நற்குணங்களும் அமையப்பெற்றவர். இராமநாதபுரம் 'சமஸ்தானத்தில் இவருக்கு நன்மதிப்புண்டெனத் தெரிகிறது. இரண்டாம் புத்திரராகிய திரு. குருசாமி முதலியார் என்பவர் ஆங்கிலமுங் கற்று தற்போது ரிஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டில் உத்தியோகஞ்செய்து வருகின்றனர்.

மா. அ. கனகசபை முதலியார்.

## அறிவியற் பகுதி

### ஞாயிற்றின் கதிர்கள்

(தொடர்ச்சி)

### ஒளி அலைகளும், நிறங்களும்

மெருகிட்டுப் பளபளப்பாயுள்ள உலோகங்களில் ஒளி அலைகள் பிரவேசிப்பதில்லை. பின்னர் என்னதான் நிகழ்கிறதென்றாலோ ஒளி அலைகள் உலோகங்களின் மேற்பரப்பினின்று எதிரொளியாகத் திருப்பி எறியப்படுகின்றன. அதனாற்றான் பளபளப்பாயுள்ள ஒரு கத்தி, அல்லது பொன்னினாலோ வெள்ளியினாலோ செய்து மெருகிடப்பட்ட ஒரு சாமான் நமது கண்களுக்கு நன்றாய்ப் புலனாகிறது. பாதரசம் ஒளி அலைகளைக் கிரகிக்காது திருப்பி எறிகிற காரணம் பற்றியே முகக்கண்ணாடிகளின் பின்புறத்தில் பூசப்படுகிறது. பாதரசம், சூரியனிடத்திலிருந்து வருகிற ஒளி அலைகளையேயன்றி, அதனை எதிர்ப்படும் நமது முகம் முதலியவற்றிலிருந்துவரும் அலைகளையும் தனக்குள் பிரவேசிக்கவிடாது திருப்பியனுப்பி விடுகிறது. ஆகவே நம்மை நாம் முகக்கண்ணாடியில் பார்க்கும்போது சூரிய அலைகள் முதலில் நமது முகத்தில் தாக்கி எதிரொளி செய்யப்பட்டு எதிரிலிருக்கும் முகக்கண்ணாடியில் தாக்குகின்றன (படுகின்றன). பிறகு அவை, தன்மேற்படும் ஒளி அலைகளை எல்லாம் ஒருபுறம் வாங்கி மற்றொருபுறம் போகவிடும் குணமுள்ள கண்ணாடியில் ஊடுருவிச்சென்று அதன் பின்புறத்திலுள்ள பாதரசத்தில் முட்டுகின்றன. பாதரசம் தன்மேற்பட்ட அலைகளைத் தன்னுள் பிரவேசிக்கவொட்டாது திருப்பி எறியுமாகை



யால், அவ்வாறு எறியப்பட்ட அலைகள் மறுபடியும் சென்றவழியே, அதாவது கண்ணாடியின் மூலமாய், வெளியேவந்து நமது கண்ணில் பட்டு, பின்புறத்திலுள்ள நரம்பிற்றாக்கி, (சென்றக்ஷணத்தில் நமது முகத்தினின்றும் எறியப்பட்ட அலைகளே) நம்முடைய முகத்தைத் தோற்றுவிக்கின்றன.

இவ்வாறு திருப்பி எறியப்படும் அலைகள் இதை மாத்திரமா செய்கின்றன? பல நிறங்களையும் தோற்றுவிக்கின்றன. என்ன! ஞாயிற்றின் கதிர்கள் இதைக்கூடவா செய்கின்றனவென்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆமாம், அஃதுண்மையே. எவ்வாறெனில், நமது கண்ணிற்குப் புலனாகும் நிறங்கள் பொருள்களால் திருப்பி எறியப்பட்டு நம்மிடத்து வருகிற ஒளி அலைகளின் பரிமாணத்தைப் பொருத்தனவாம். உண்மை இஃதேயாகவின் பொருள்கள் திருப்பி எறியும் அலைகளுக்குத் தக்கவாறு அவற்றைப் (ஒளி அலைகளை) பலநிறமுடையனவாகக் காண்கிறோம். உதாரணமாகச் சூரிய கிரணம் ஒரு இலையின்மேல் வீசும்போது அக்கிரண அலைகளின் ஒரு பாகம் அவ்விலையினின்று நேரே நம் கண்களுக்கு எறியப்படுகிறது. அப்போது நாம் அவ்விலையின் மேற்பரப்பைப் பார்க்கிறோம். ஆனால் அலைகளின் மற்றைய பாகங்கள் நேரே இலைக்குட்சென்று சில அங்கே உபயோகப்படுத்தப்பட்டும் சில நிறுத்தப்பட்டும் போகின்றன. பசிய அலைகள் தவிர, சிவப்பு, மஞ்சள், நீலம், கருநீலம் முதலிய அலைகள் இலைக்கு வேண்டியவைகளா யிருக்கிறபடியால் அவற்றை மாத்திரம் உட்கொண்டு தேவையில்லாத பசிய அலைகளை வெளியே வீசி நமக்குப் பசுமை நிறத்தைத் தோற்றுவிக்கிறது. அதனாற்றான் இலை பசுமையாயிருக்கிறதென்கிறோம். ஆகையால், நாம் இலை பசுமையாயிருக்கிறதென்று சொல்வோமானால், அதற்கு ஞாயிற்றின் கதிர்களிலுள்ள பசிய அலைகள் இலைக்குத் தேவையில்லாதபடியால் அவற்றைத் திருப்பி நம்மிடத்திற்கு அனுப்பிவிடுகிறது என்பதே பொருள். அதேமாதிரி ஒரு வெள்ளைத் துணியானது தன்மேற்படும் ஏறக்குறைய எல்லா அலைகளையும் ஏற்காது தள்ளிவிடுகிறது. ஒரு கருப்புத் துணியானது எல்லா அலைகளையும் வாங்கிக் கொள்ளுகிறது. செந்தாமரைப் பூக்கள் செந்நிற அலைகளை மாத்திரம் ஏற்காதுதள்ளி விடுகின்றன. இக்காரணத்தால் தான் ஒரு இருண்ட அறையிலுள்ள வெள்ளைத்துணி நமக்குப் புலனாகிறது. கருப்புத்துணி தோன்றுவதில்லை. வெள்ளைத்துணி அவ்விருண்ட அறையின் கண்ணுள்ள மங்கிய ஒளி அலைகளையும் உட்கொள்ளாது தள்ளிவிடுகிறது.

இலைகளிலும், வெள்ளைத் துணியிலும், செந்தாமரைப் பூக்களிலும் ஆராய்ச்சி செய்யுமிடத்து நிறம் என்பது உண்மையில் இல்லை; ஏதோ சில காரணத்தால் அவை ஞாயிற்றின் கதிரிலுள்ள சில நிறமுள்ள அலைகளை உட்கொள்ளாது நமது கண்களுக்குத் திருப்பி அனுப்பிவிடுகிறபடியால், அவை அவ்வவ் நிறமுள்ளவைகளாகத் தோன்றுகின்றன என்பதை நினைக்கும்போது நமக்கு மிகவும் ஆச்சரியமுண்டாகிறதல்லவா? எங்கே பார்த்தாலும், எதைப் பார்த்தாலும், நம்மைச் சூழ்ந்துள்ள அழகான எல்லா நிறங்களும், வெளிச்சங்களும், நிழல்களும், நுண்ணிய சூரிய அலைகளின் வேலையாகவே இருக்கின்றன.

இவைமாத்திரமா! ஒளி செடிகளின்மேல்படும் போது இன்னும் அபாரமான வேலையைச் செய்கிறது. இலைகளால் உட்கொள்ளப்படும் ஒளி அலைகள் அங்கு சும்மா யிருப்பதில்லை; இலைகள் உட்கொள்ளும் உணவை ஜீரணம் செய்து, செடிகொடிகள் வளர்வதற்கு ஆதாரமாயிருக்கிற பாலை உண்டாக்குகின்றன. சூரிய ஒளிபடாதிருக்கிற மாஞ்செடிகள் வெளுத்தும், நோய்பிடித்தும் போகின்றனவென்பதை நாம் எல்லோரும் உணர்வோம். காரணம் என்னையோவெனில், ஒளி அலைகள் அவற்றின்மேற்படாமையால், அவை தமக்கு வேண்டிய உணவைக் காற்றினின்றும் பெறமுடியவில்லை. அவற்றிற்கு அவசியமாயிருக்கிற பால், ரசம் ஆகியவற்றை உண்டாக்கிக்கொள்ளவும் முடியவில்லை. அழகான வெளியிடங்களில் வளரும் புல் பூண்டுகளையும், மாஞ்செடிகளையும், வயல்களிலுள்ள பயிர்களையும், இயற்கை நிலத்தோற்றத்தையும், நாம் காணும்போது பசுமையான ஒவ்வொரு மாஞ்செடி முதலியவற்றிற்கும், உயிர் கொடுத்துதவும் பொருட்டு நாள் முழுதும் ஓயாது உழைத்துக்கொண்டிருக்கும் நுண்ணிய ஒளி அலைகளின் வேலையைக் காண்கிறோம்.

### வெப்ப அலைகளின் வேலைகள்.

இதுவரையில் நாம் ஒளியைப்பற்றி மாத்திரம் ஆராய்ச்சி செய்து கொண்டு வந்தோம். இனிச்சூரிய வெப்பத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். நமது கையை நீட்டி வெயிலில் பிடிப்

போமானல், வெப்ப அலைகள்கூட வேலைசெய்கின்றன என்பதை உணர்வோம். நமது கண்களிற்படும் வெளிச்சம் புலனாகாதவாறு அவ்வளவு மெதுவாகச் செல்லும் சூரிய கிரணங்களிலும், ஒளியால் உணர முடியாவிட்டாலும் வெப்பத்தால் உணரக்கூடிய அநேக அலைகள் இருக்கின்றன. நமது முகத்தருகே ஒரு காய்ச்சிய இரும்புத் துண்டைப் பிடிப்போமாயின், வெப்ப அலைகளின் உண்மையை நாம் இலகுவில் உணரலாம். அதனிடத்தி லிருந்து யாதொரு ஒளியும் தோன்றவில்லை. ஆயினும், நமது முகத்தின்மீது வெப்ப அலைகள் கோரமாய் வீசித்தீய்க்கின்றனவென்று உணருகிறோம். ஞாயிற்றின் கதிர்களில் இத்தகைய ஒளியற்ற வெப்ப அலைகள் அநேகமிருக்கின்றன. அவைதான் உலகத்தில் பெரும்பாலாயுள்ள வேலைகளைச் செய்கின்றன.

முதலாவது சலனத்தோடே பூமியை நோக்கிவருகிற உஷ்ண அலைகள்தான் கடல், குளம், ஆறு முதலியவற்றிலுள்ள நீர் அணுக்களைப் பிரித்து வாயு மண்டலத்தின் உச்சிக்கு அனுப்புகின்றன. அதைப்பற்றி வேறொரு வியாசத்தில் விரித்துரைப்பாம். இவ்வாறு மேலே சென்ற நீர்த்துளிகள்தான் மறுபடியும் மழைத்துளிகளாகக் கீழே வீழ்ந்து பூமியின்கண் பெருக்கத்தையுடைய அருவிகளையும் ஆறுகளையும் உண்டாக்குகின்றன. இவ்வெப்ப அலைகள்தான் காற்றை உஷ்ணமாகவும் இலேசாகவும் ஆக்கி அதை மேலே போகச் செய்கிறது. உஷ்ண காற்று மேலேபோய்விடுவதனால் அது பாவியிருந்த இடத்திற்கு அருகேயுள்ள குளிர்ந்த காற்று பாய்கிறது. அதனால் சுழல் காற்று காற்றோட்டம் முதலியவை உண்டாகின்றன. இவ்வாறுண்டான சுழல்காற்றுகளாலும், காற்றோட்டங்களாலும் கடலில் நீரோட்டங்கள் உண்டாகின்றன.

இதே ஒளியற்ற உஷ்ண அலைகள்தான் இன்னும் பூமியின்மேல் தாக்கிச் செடி கொடிகள் வளர்வதற்கு அநுகூலமாயிருக்கிற உஷ்ணத்தையும் உண்டாக்குகின்றன. இவையேதான், ஞாயிற்றிலிருந்து நேராகவும், செடிகளின் மூலமாய்ச் சுற்று வழியாகவும், நம்மிடத்திற்கு வந்து நம் உடம்பில் உஷ்ணத்தைச் சேமித்துவைக்கின்றன. மரஞ் செடிகள் தங்கள் வளர்ச்சியின் பொருட்டு ஞாயிற்றின் ஒளிக்கதிர்களையும், வெப்பக் கதிர்களையும் உபயோகப் படுத்திக்கொள்ளுகின்றன என்பதைக் கவனத்தில் நாம் வைத்துக்கொள்ள வேண்டும். அம்மரஞ் செடிகளிலுண்டாகும் இலை, காய், பழம் முதலியவற்றையாவது அல்லது அவற்றைத் தின்று வளரும் ஜெந்துக்களையாவது நாம் உணவாக உட்கொள்ளுகிறோம். உண்ட உணவாகிய இலை காய் முதலியவை ஜீரணமாகும்போது, அவை முன் தாவரங்களின் அங்கங்களாக இருந்த காலத்து ஞாயிற்றின் கதிர்களிலிருந்து உட்கொண்ட வெப்பத்தை வெளிப்படுத்த அது நமது தேகத்தையடைகிறது. நாம் கையின்மேல் மூச்சுவிட்டுப் பார்ப்போமாயின் அம்மூச்சு எவ்வளவு சூடாயிருக்கிறதென்று தெரிகிறது. அவ்வெப்பம் ஒரு காலத்தில் ஞாயிற்றின் கதிர்களிலிருந்து தாவரங்களால் உட்கொள்ளப்பட்டுப் பிறகு நாம் உணவாகக்கொள்ளும் அவற்றின் (காய் முதலியன) மூலமாய் நம்மிடத்துவந்து இப்போது நமது உடம்பிலுள்ள உஷ்ணத்தைக் கெடாதவாறு காத்துவருகிறது.

மரஞ் செடிகள் தாம் உட்கொண்டு சேமித்து வைத்திருக்கும் வெப்பத்தை வெளியாக்கும் வழி வேறொன்றுமுண்டு. பல்லாயிர வருடங்களுக்கு முன்னே சூரிய வெப்பத்தை உட்கொண்டு வளர்ந்திருந்த மரங்கள் அழிந்து ஆழமாய்ப் பூமியில் தாம் உட்கொண்ட வெப்பத்தோடு புதைக்கப்பட்டுக் கிடந்து இப்போது சுரங்கங்களிலிருந்து நிலக்கரியாக வெட்டி எடுக்கப்படுகின்றன என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகையால் நிலக்கரி வெளியாக்குகிற வெப்பம், தற்போது நிலக்கரியாக மாறியுள்ள மரங்கள் ஒரு காலத்தில் சூரிய கிரணங்களிலிருந்து உட்கொண்ட வெப்பமேயாம். நிலக்கரியை எரிப்பதனால் எவ்வளவு வேலை நடக்கிறதென்று பாருங்கள். நிலக்கரி நெருப்பினால் சூடுண்டு ஆவியாக மாற்றப்பட்ட நீரினாலேயே நீராவி எஞ்சின்களும், மற்றும் பல யந்திரங்களும் வேலைசெய்கின்றனவல்லவா? அதே சக்தியினால் நீராவிக் கப்பல்கள் உலகமுழுதும் சுற்றி வருகின்றனவன்றோ? அதே மாதிரிதான் நாம் விளக்கில்விடும் எண்ணெய் செடிகளில் விளைகின்ற முத்துக்கொட்டை, இலுப்பக்கொட்டை, எள்ளு முதலியவற்றிலிருந்தும், ஆடு, மாடு, மீன் பிராணிகளிடத்திலிருந்தும் உண்டாகின்றன. நாம் விளக்காக எரிக்கும் மெழுக்குவர்த்திகள் தாவரங்களின் சாரத்தினலாவது தாவரங்களாகிய புல் பூண்டு முதலியவற்றைத் தின்று வளரும் மிருகங்களின் கொழுப்பினலாவது செய்யப்படுகின்றன.



ஆகையால் எவ்விதம் திருப்பித்திருப்பிப் பார்த்தாலும் உலகத்திலுள்ள வெளிச்சமும் வெப்பமும், நெருப்பினல் உண்டாவதானாலும் சரி, விளக்கினல் உண்டாவதானாலும் சரி அல்லது எந்த விதத்தில் உண்டாவதானாலும் சரி, யந்திரங்களை இயக்குவதானாலும் சரி, வண்டியை இழுப்பதானாலும் சரி, மரக்கலத்தைச் செலுத்துவதானாலும் சரி, எல்லாம் சூரியனிடத்திலிருந்து தோன்றி ஆகாயமூலமாய் வரும் (ஞாயிற்றின் கதிர்கள் என்று சொல்லப்படும்) கட்புலனாகாத அலைகளின் வேலை என்றே தெரிகிறது.

(தொடரும்.)

மா. அ. கனகசபை முதலியார்.

## மாதர் பகுதி

### "பெண்மக்கள் நிலையும் இந்து சாஸ்திரமும்"

(திராவிடனிற் கண்டது)

பெண்மக்களின் கஷ்ட நஷ்டங்களை நிவர்த்திப்பதற்காகச் சட்டசபை மெம்பர்களில் பல அறிஞர்கள் முயற்சிக்கிறார்கள். பாலியவிவாகத்தைத் தடுப்பதற்கும், விவாக வயதை உயர்த்துவதற்கும், (சாஸ்திர சம்மதமான சில சந்தர்ப்பங்களில்) விவாக பந்தத்தை ரத்து செய்துகொள்ளும் அதிகாரத்தைப் பெண்களுக்குக் கொடுக்கும்படிக்கும் சட்டம்செய்வதற்கு ஹரிவிலாச சாரதா அவர்களும், சர் ஹரிசிங்கௌர் அவர்களும் செய்துவரும் முயற்சிகளை யாவரும் அறிவர். ஆனால் விவாக விஷயத்தில் மாத்திரமல்ல, மற்றும் இதர விஷயங்களிலும்கூட பெண்களின் நிலை மிகப் பரிதாபகரமாயிருக்கின்றது. அதை உடனே சீர்திருத்தம் செய்யவேண்டிய அவசியம். சிறப்பாக, அவர்களின் பொருளாதார நிலையைச் சீர்படுத்த வேண்டும். இதைப்பற்றிப் பம்பாய் சட்டசபை மெம்பரான திருவாளர் ஜெயகர் வேலைசெய்யக் கங்கணம் கட்டிக்கொண்டார். சமீபத்தில் பிராமண சபையின் ஆதரவில் அவர் செய்த ஒரு பிரசங்கத்தில் அவருடைய விருப்பங்கள் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரசங்கத்தில் வைதீக யுகத்திலிருந்து இந்நாள்வரை இந்து தர்ம சாஸ்திரங்களில் பெண்களுக்கு எப்படிப்பட்ட ஸ்தானம் கொடுக்கப்பட்டு வந்ததென்பதை விளக்கியிருக்கிறார். வைதீக காலத்தில் பெண்கள் ஆண்களைப் போன்று சமமான உரிமை பெற்றிருந்தார்கள். அக்காலத்தில் பெண்மக்கள் எல்லோரும் விவாகம் செய்துதான் தீரவேண்டும் எனும் நிர்ப்பந்தம் இல்லை. வயதான கன்னிகைகள் தகப்பனுடைய ஆஸ்தியில் பாகம் செய்து கொள்ளும் உரிமை ஏற்பட்டிருந்ததாக வேதங்களில் பிரமாணமிருக்கிறது. அது மட்டுமல்ல, அப்படிப்பட்ட கலைக்கரசிகளான பெண்மணிகள் ராஜசபைகளில் கலவி அறிஞர்களோடு தத்துவ விஷயங்களைக் குறித்துத் தர்க்கம் செய்ததாகவும் தெரிகிறது. விவாகம் மிகமேலானதாக எண்ணப்பட்டு வந்தது. புருஷன் தன் மனைவியை ஒரு வரப்பிரசாதம் போல ஏற்றுக்கொண்டிருந்தான். அக்காலத்தில் பாலிய விவாகம் கிடையாது. விவாகநிச்சயமாகிறகாலத்தில் பெண் தன் குடும்ப பாரங்களை ஏற்றுக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்திருப்பாள். நிர்ப்பந்த விவாகம் கிடையாது. "எழுந்திரு! நீ இறந்து போனவனின் பக்கத்தில் வீழ்ந்திருக்கிறாய். இறந்துபோன கணவனை விட்டுப் பிழைத்திருப்பாரோடு வந்து சேர். உன்னைக் கைப்பிடித்து விவாகம் செய்யும் ஆவலுள்ளவருக்கு மனைவியாவாயாக" என்று தகனக் கிரியைகள் சமயத்தில் சொல்லப்படும் ஒரு மந்திரத்தில் விதந்துக்களை முக்யமாக உத்தேசித்தே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந் நிலைமைகள் யாவும் காலடைவில் மாறிவிட்டன.

ஆரியர்கள் பிறஜாதியாரோடு போராடத் தொடங்கின காலத்திலிருந்து புருஷர்களின் அதிகாரம் உயர்ந்து பெண்களின் நிலை அடிமைத்தனத்திற்கு வந்து விட்டதென்று ஜெயகர் சொல்லுகிறார். ஆனால் ஆரியர்கள் பிறஜாதிப் பெண்களை மனைவிகளாக ஏற்றுக்கொண்டதே பெண்களின் நிலை தாழ்ந்துபோனதற்கு ஒரு காரணமென்று மற்றும் சிலர் சொல்லுகின்றனர். எப்படியானாலென்ன? ஆரியரல்லாதவர்களோடு ஆரியர்கள் கலப்பு ஏற்பட்ட காலத்திலிருந்தே பெண்களுக்கு சார்விதமான மாசு ஏற்பட்டுவிட்டதெனலாம். பல பெண்களை மனை

மிகளாக ஏற்றுக்கொள்வதும், நினைத்தால் மனைவியை விலக்கும் முறையும், இன்னம் பலவிதமான விவாகமுறைகளும் ஆரிய ஜாதியில் அமுலுக்கு வந்தன. சண்டையில் போர்செய்வதற்கு வீரம் இல்லாதவர்களென்னும் நிந்தையை எடுத்துக்காட்டி யக்ஞம் செய்கிற சமயத்தில் பங்கிட்டுக்கொடுக்கிற சோமரசத்தை ஏற்றுக்கொள்ளப் பெண்களுக்கு உரிமை யில்லையென்ற வழக்கம் ஒன்று செய்யப்பட்டது. இந்த விலக்கு (நிஷேதன்) எப்படியோ அசந்தற்பமாய் (தந்தையின் சொத்துக்களில்) பாகம் செய்துகொள்வதற்கே பெண்களுக்கு உரிமை கிடையாதென்றும் அர்த்தம் உண்டாகும்படி செய்து பெண்களுக்குப் பெரியதோர் தீங்கிழைக்கதென ஜெயகர் சொன்னர். ஆனல் மனு—காத்தியாயர் போன்ற ஸ்மிருதிகர்த்தாக்கள் ஸ்ரீதனம் (சீதனம்) என்னும்பேரால் சொத்தைப் பெறுவதற்குப் பெண்களுக்கு உரிமையைக் கொடுத்தார்கள்.

வாரஸ் உரிமையினலாவது, கிரய மூலியமாயாவது, பாகித்துக்கொள்வதினலாவது, மற்றெவ்விதமாகிலும் சீதனம்வரலாமென்று சொல்லி, ஒரு சிறிதாவது பெண்களுக்கு ஆஸ்தி விஷயத்தில் எவ்வித கஷ்டமில்லாமல் செய்தனரென்றும். ஆனல் பிரிவீ கவுன்சிலர் இவ்விடத்திய நிலைமைகளைக் கவனிக்காமல் தங்கள் தீர்ப்புக்களில் ஒரு சிறிது மிதமான வியாக்கியானங்களைக்கூட நிராகரித்துப் பெண்களின் உரிமைகளைக் குறைப்பதற்கே பார்த்தார்களென்றும், அதனலேயே இப்போது சட்டம் செய்யவேண்டிய அவசியமேற்படுகிறதென்றும் ஜெயகர் சொல்லுகிறார்.

அவிபக்த குடும்பத்திலுள்ள ஹிந்துவிதந்துகளின் உதவியற்ற பரிதாபநிலையைச் சீர்திருத்தும பொருட்டு உடனே சட்டம் செய்யவேண்டியது அவசியம். பாகித்துக் கொள்ளாமல் கணவன் இறந்துபோக நேர்ந்தால் அவள் மிகவும் கஷ்டத்தின்பால் படுகிறாள். ஆண் சந்ததியின்றேல் அவள் தன் கணவனுக்குக் கிடைக்க வேண்டிய ஆஸ்திக்கு உரிமையில்லாதவளாய்ப் போய்விடுகிறாள்.

மத்தியஸ்தர்களை நியமிக்கும் ரூல்ஸ் மிகவும் அக்கிரமமாக விருக்கிறது. சன்னியாசிகளைப் போலஇருக்கவேண்டிய விதவைகளுக்குச் சொத்தில் என்ன சம்பந்தம் என்று சொல்வது போல் பிரிட்டிஷ் நீதிபதிகள் தீர்ப்புகள் சொல்லியிருக்கின்றனர். ஆண் சந்ததிகளில்லாவிட்டாலென்ன? பரிபூர்ண உரிமையோடு தன் கணவனுடைய சொத்தை ஏன் அவருடைய மனைவி அடையக்கூடாதோ? அர்த்தமாகவில்லை. பம்பாய் மாகாணத்தில் தகப்பனுடைய சொத்தில் மகளுக்கு வார்சு பாத்தியதையுண்டு. அதைப் போன்ற சௌகரியம் மற்ற விடங்களிலில்லை. சுயராஜ்யத்திற்காகப் போராடும் இக்காலத்தில் பெண்களின் நியாயங்களையும் உரிமைகளையும் மதித்து அவர்களுக்குச் சமூகத்தில் சமமான கௌரவம் கொடுப்பது விவேகமாகும். ஜெயகர் அவர்களின் முயற்சி பலித்துப் பெண்களுக்கு மேன்மையுண்டாக பகவானைப் பிரார்த்திக்கிறோம்.

தர்மசாதனி.

ஒரு நிருபம்.

செங்கற்பட்டு ஜில்லாவில் நம்மவர் வசிக்கும் பல கிராமங்களுக்குள் எங்களூரே ஆங்கிலக் கல்வியில் முற்பட்டதென்று கூறலாம். இவ்வூர்ப்பிள்ளைகள் அநேகர் ஆங்கிலஉயர்தரக்கல்வி கற்று உத்தியோகங்களிலு மிருக்கின்றனர். அநேக சிறுவர்கள் கலாசாலைகளில் சேர்ந்து கற்றும் வருகின்றனர்.

தற்போது திரு பூ. குப்புசாமி முதலியார் செல்வப் புதல்வி காமாக்ஷியம்மாள் என்னும் பெண்மணியும், திரு. பி. அ. சுப்பராய முதலியார் செல்வப் புதல்வி மாணிக்கம்மாள்என்னும் பெண்மணியும் இவ்வூர்ப் பெண்பாடசாலையின் உபாத்தியாயினிகளாக இருக்க ஒப்புக்கொண்டு அவ்வுத்தியோகத்தில் அமர்ந்திருத்தல் மிகவும் பாராட்டத் தக்கது. 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்' என்ற பெருநோக்கங் கொண்டு,தாம் கற்றதோடு நில்லாது,தாம் கற்றவற்றைப் பிற சகோதரிகளுக்கும் கற்பிக்க முன் வந்திருக்கும் இப்பெண்மணிகளின் நோக்கத்தைப் பின் தொடர்ந்து பல சகோதரிகள் பல்வகையினும் பெண்கல்வியை விருத்திசெய்ய முயல்வார்களாயின், நம் சமூகம் வெகுசீக்கிரம் முன்னேற்றமடையு மென்பதில் சந்தேகமில்லை. திரு. அ. இரத்தினமுதலியார் புதல்வியாகிய மற்றொரு பெண்மணி ட்ரெயினிங் ஸ்கூலில் சேர்ந்து வாசித்துவருவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இப்பெண்மணிகள் கொண்டுள்ள பெருநோக்கத்திற்கு அநுமதிதந்த பெற்றோரது பரந்தநோக்கத்தைக் குறித்தும் மிகச் சந்தோஷமடைகிறேன். ஆயினும், இவ்வூர்ச் சங்கம் ஊக்கங்கொண்டு செய்யவேண்டிய அளவு தீவிரமாக வேலை செய்யாதிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே.

10-9-28.

உண்மையுணர்ந்தோன்,
மாளும்பதி.



## நாவல் பகுதி

### காதலி குடும்ப மகமை

அம்மா மீனுட்சி! வா, வா, சீக்கிரம்; இந்தா. இன்றைக்குத் தொடக்கம். நேற்றோடு காலணு ஆகிறது. எங்கே ஐயா?

சுந்தரன் :—என் முத்தம்மா, நாலணுவுக்கா மோர் வார்த்திருக்கிறாய்? சென்னைக்குப் போன எங்கள் முதலாளி இன்று 10-மணி வண்டியில் தான் வருவார். இன்று அமாவாசையானதால் விடுமுறை நாள். முதலாளி வந்ததும் கணக்குத் தீர்த்துப் பணங் கொடுப்பார். வாங்கி வந்து உனக்கு நாளைக்குப் பணங்கொடுக்கிறேன், போ.

மோர்காரி :—என்னய்யா! எட்டுக்கு இரண்டணுவுக்காகப் போனவாரமுந் தரவில்லை, இந்த வாரமுமிப்படிச் சொன்னல் மாடு மண்ணையா தின்னும்?

அடுத்தவீட்டுத் தேவசேனை :—என்னுங்க அண்ணு மோர்கார முத்திபிடத்தில் சண்டை?

சுந்தரன் :—சண்டை யில்லையம்மா மோர் வாங்கின துட்டுக்குத்தான். முதலாளி பால சுப்பிரமணிய முதலியார் நேற்றைக்கே வந்திருந்தால் கூலி பட்வாடா செய்திருப்பார். நெசவுச்சாலை கணக்கப் பிள்ளை தன்னிடம் முதலாளி சாவி கொடுக்கவில்லை யென்கிறார். இந்த வாரம் வேலையாட்கள் பாடு திண்டாட்டத்திலிருக்கிறது.

தேவசேனை :—இதற்குத் தானு இவ்வளவு கூச்சல்! மீனுக்ஷி நேற்று இட்டிலிக்கார சுப்பம்மாளுக்கு ஆறணுவுக்கு அரிசி விற்ளாமே, அதை என்ன செய்தாள்? மோர்காரிக்குக் கொடுக்கிறது தானே. இருந்தாலும் இப்படிக் குடித்தனம் பண்ணுகிற பெண்பிள்ளை கண்டதில்லை.

சுந்தரன் :—அம்மா தேவசேனை! என்ன, அரிசியா விற்றாள்? இவளா? பேஷ்! பேஷ்! இவளுடைய நடிப்பும் நயவஞ்சகமும் இன்றைக்கல்லவா தெரியவந்தது? "பணக்காரன் பெண்ணுக்குப் பாங்கு பிடிபடும்; கூலிக்காரன் பெண்ணுக்குக் குப்பையில் மணக்கத் தான் தெரியும்" என்று என் தாயார் சொன்னது இன்றல்லவா உண்மையாயிற்று? என்னை வற்புறுத்தி என் மாமன் மகள் வள்ளியம்மையைக் கலியாணம் செய்து கொள்ளச் சொல்லி, என் தமக்கையும் தாயாரும் என்னபாடு பட்டார்கள். எல்லாருக்கும் தெரிந்தது தானே. நான் இவளையே வேணுமென்று மணஞ்செய்தது எதற்காக? "கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்றையவை." என்றபடி ஏதோ சொற்ப கல்வியறிவு உடையவளாயிருக்கிறாளே; மேலும் சிறுபோதே தாயை யிழந்து மாற்றாளிடம் கஷ்டப்பட்டவ ளாயிற்றே என்று எண்ணி, என் தாயார், தமக்கை, தமயன் முதலியவர்கள் சொல்லைத்தட்டி இவளைக் கலியாணம் செய்து எல்லா உறவையுமிழந்து கூலிக்கு நெய்து குடிக்கூலிக்குக் குடியிருந்து வருகிறேன். என்ன துணிவு! என்பு நோக நெய்து விலைகொடுத்து வாங்கிய அரிசி! காதகி! இந்தப் பதினெரு மாதமாய் என் சுற்றத்தார் மீது எனக்கு நினைவு வாராதவண்ணம் மயக்கி விட்டாளே! நான் வீட்டிற்கு வேண்டிய சகல சாமான்களும் வாங்கிக் கொடுப்பதோடு காய் கறிகளுக்கு யிவளிடம் வேண்டிய துட்டும் கொடுத்து வந்திருக்க, நேற்று அரிசியை விற்றுச் சிறு தேட்டுச் சம்பாதிக்க எண்ணிய இவள், இன்னும் என்ன துறையிலிறங்கமாட்டாள்? அன்றியும் பாவோடிச் சுப்பன் இவளிடம் நூல் கொடுத்துக் கண்டு திரித்து வாங்கிப் போகிறான்; அதையும் நான் கவனிப்பதில்லை. இவள் என்னை வஞ்சித்து இவ்விதம் சம்பாதித்து என்ன செய்யப்போகிறாள்? சரிதான், "கூறாமற் சந்யாசங்கொள்" என்ற மூதாட்டி வாக்கே போற்றத்தக்கது. சரி, இன்று அமாவாசை. இன்றைக்குத்தானு இதுவும் விளங்கவேண்டும். சரி, முதலாளி வந்துவிடுவார். (சுந்தரன் போய் விட்டான். மற்றையோரும் போய்விட்டார்கள்)

இவ்வளவிற்கும் கதவின் மறைவில் மௌனத்தோடு நிலங்கீறிநின்ற நம் மீனுட்சி சுந்தரன் வெளியிற் சென்றவுடன, வீடு முற்றங்களை மெழுகிச் சுத்தஞ்செய்து கோலலைக் கிணற்றில் ஸ்நானம் செய்து கணவன் வேஷ்டி முதலியவற்றை வழக்கம் போல் தோய்த்து உலர்த்தி

விட்டு, தான் மடியுடுத்து, சீக்கிரம் சமையல்செய்து முடித்து, அடுப்பில் வெந்நீர் வைத்துவிட்டுச் சுந்தரன் வருகையை எதிர்பார்த்திருந்தாள்.

ஏற்கெனவே கோபத்தோடு சென்ற சுந்தரன் நெசவுச்சாலை கணக்கப் பிள்ளை கேட்ட கணக்கிற்குச் சரியான பதிற்சொல்லாமலும், வெறுப்புற்றவனாய் இங்குமங்கு மலைந்து கடைசியாகக் குளத்துறை போய் ஸ்நானம் செய்து விட்டு நெற்றிக்கிடாமல் ஈர வஸ்திரத்துடன் பகல் ஒரு மணிக்கு வந்து சேர்ந்தான். சுந்தரனைக் கண்ட மீனாட்சி உடனே பஞ்சபாத்திரத்தில் ஜலமும் கொல்லையிலிருந்த முல்லைச்செடியிற் கொஞ்சம் புஷ்பமும் எடுத்து விபூதிச் செம்புடத்துடன் கொண்டு போய் சிவபூஜைத் தாழ்வாரத்தில் வைத்துவிட்டுச் சந்தனக்கல்லில் வீட்டிற்குள் சந்தனம் இழைத்துக் கொண்டிருந்தாள். சுந்தரன் வந்ததும் வெறிகொண்டவனைப்போல் ஈர வேஷ்டியைக் களைந்து உலர்ந்த வஸ்திரத்தை யுடுத்துக்கொண்டு திரும்பினான்; தாழ்வாரத்தில் தீபம் எரிவதைக் கண்டு உள்ளே சென்றான். உடனே மீனாட்சி ஒரு சிறிய கிண்ணத்தில சந்தனத்தை வைத்து வெளியிலிருந்தபடியே தாழ்வாரத்தில் கையை நீட்டி வைத்து விட்டுச் சமயலறை வேலையைக் கவனித்தாள்.

சுந்தரன் தடபுடலாக விபூதி யெடுத்து நெற்றிக்கிட மறந்து மற்றைய அவயவங்களுக்கிட்டு விரைவில சிவபூஜையை முடித்துச் சந்தனம் வைக்காமல் வீட்டினுட் புகுந்து, இலையின் பக்கத்தமர்ந்து, நைவேத்திய முதலானவை செய்யாமல், சாதத்தைக் கலந்து கையில் ஒருபிடி யெடுத்து, வழக்கப்படி காகத்துக்கு வாங்கி வைக்க ஒரு புறமாக நின்று கையை நீட்டிக் கொண்டிருந்த மீனாட்சியிடம் கொடாமலும், தான் சென்று வைக்காமலும், சிறிது நேரம் கையில் வைத்துக்கொண்டே யோசித்து வாயிற்போட்டுக் கொண்டான். மீளவும் இரண்டொரு கவளம் உண்டபின், மீனாட்சி மோர் படைக்க வருவது கண்டு, சீக்கிரம் இலையை மூடிவிட்டு எழுந்து கைகால் சுத்தி செய்து கொண்டு செம்பை அவ்விடமே எறிந்துவிட்டுப் பரபரப்புடன் வெளியிற் சென்றான்.

கணவனது நிலைமையைக் கண்ட மீனாட்சி அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். காலை முதல் பின்னும் சுத்த ஜலங்கூட அருந்தாத மீனாட்சி முற்றத்தி லுட்கார்ந்து கொல்லை ஒரு சிறு கத்தியால பசலை மிளகாயை நறுக்கி வைத்துவிட்டு, இஞ்சியின் மேல்தோலை சீவிக் கொண்டிருந்தாள். கீழ்த்தெரு அன்னத்தம்மாள் தன் குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு, 'மீனாட்சி,' என்ற சப்தத்துடன் உள்ளே வந்தவள் 'என்னம்மா! கை வேலையா, என்ன?' என்று கேட்டாள்.

மீனாட்சி :—ஒன்றுமில்லை; இராப்போஜனத்திற்கு உப்புமா செய்யவேண்டும்.

அன்னத்தம்மாள் :—அதற்கு இன்னேரத்திலேயே என்ன அவசரம்?

மீனாட்சி :—எனக்கு உடம்பு ஜுரம் வரும் போலிருக்கிறது, சீக்கிரம் செய்து வைத்துவிட வேண்டும். நீங்கள் ஆறுமணிக்கே காய்ச்சின பாலில் கால்படி உங்கள் பெண்ணிடம் கொடுத்தனுப்புங்கள். வந்தகாரியம் என்ன?

அன்ன :—காரியம் ஒன்றுமில்லை. உங்கள் சங்கத்துப் பத்திரிகை ஆடி, ஆவணி இரண்டும் கொடுக்கவேண்டும். ஆனி மாதச் சஞ்சிகையைப் பார்த்தேன். அதில் பூவிருந்தவல்லி இராஜு முதலியாரவர்களும் திருமருகல் ஸ்ரீ சண்முகானந்த சன்மார்க்க சங்கக் காரியதரிசி சி. நி. தாண்டவராயன் அவர்களும் எழுதியிருந்த கட்டுரையைக் கவனித்தாயா? இவர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்! நாம் வாயாரவாழ்த்துதலேயாம். ஏனம்மா மீனாட்சி! இந்தப் பத்திரிகை உங்கள் ஜாதியாருக்குமட்டுமா? அல்லது சந்தா அனுப்பினால் யாருக்கும் அனுப்புவார்களா?

மீனாட்சி :—ஆகா, தடையென்ன! சிறப்பாகச் செங்குந்தமித்திரன், பொதுவாகப் புவனத்திற்கே மித்திரன.

அன்ன :—நல்லது, அப்படியானால் இன்றைக்கே இவ்வருடத்திய சஞ்சிகையை அனுப்பச் சொல்லிச் சந்தா அனுப்புகிறேன். எங்கே, ஆடி ஆவணி சஞ்சிகையைக் கொடு.

மாலை 4-மணிக்கு நெசவுச்சாலை சாயப்பட்டறை மைதானத்தில திருவாளர் பாலசுப்பிரமணிய முதலியார் தலைமையின்கீழ் ஒரு பெருங் கூட்டம் கூடியது. சங்கக் காரியதரிசி, சங்கத்தின் சென்றமாதம நிகழ்ச்சியை வாசித்தபின்பு, ஒவ்வொருவரும் பொது நன்மையைக் குறித்தும இதர விஷயங்களைக் குறித்தும் பல அரிய பிரசங்கங்கள் செய்தனர். ஐந்தரை மணிக்குத் தலைவர் எழுந்தார். உடனே பாவோடி சுப்பன் மேஜையினமீது ஒரு கடிதமும் ஆறணாவும் கொண்டு வந்து வைத்தான். தலைவர் கடிதத்தின் மேல்விலாசத்தைக் கவனித்தார். அதில்



மகா-ஸ்ரீ சுப்பா முதலியாரவர்கள் இந்தக் கடிதத்தையும் இதோடு வைக்கப்பட்டிருக்கும் ஆறணாவையும் நாளைக்கூட்டத்தில் தலைவரிடம் சேர்க்கவேண்டியது" என்று எழுதப்பட்டிருந்ததை யறிந்த தலைவர், உறையைக் கிழித்து உள்ளிருந்த கடிதத்தை மனதிற்குள்ளே பார்த்துவிட்டுக் களிப்போடு காரியதரிசியிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னார்.

(காரியதரிசி வாசிக்கிறார்) "கனவான்களே! சகோதரர்களே! தலைவரவர்களே! நமது சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமானது அதிசீக்கிரத்தில் மற்றைய சங்கங்களைவிட முன்னேற்றமுறும் நாள் எந்நாளோ என்று ஏங்கியிருந்த எனக்கு ஒரு சிறு யுத்தியை உணர்த்திற்று. எமது இல்லத்திற் சமயலுக்கு எடுத்து வைத்த அரிசியை ஒரு காக்கை வாய் நிரம்ப அள்ளிக்கொண்டு வெளியிற் சென்று, கீழே கொட்டிப் பொருக்குந் தருணத்தில், ஒரு பூனை வரவும் காக்கை பறந்துவிட்டது. நான் அந்த அரிசியை அள்ளி, அதோடு பிரதிதினமும், அவ்வளவு அரிசி, சமயலுக்கு எடுப்பதிலிருந்து எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு வந்தேன். ஒரு மாதத்தில் ஆறணா அரிசி சேர்ந்தது. அதை விற்று அனுப்பியிருக்கிறேன். பிரதி மாதமும் அனுப்புகிறேன். இதில் எவ்வித நஷ்டமோ கஷ்டமோ இல்லை. இதைத் தங்கள் மகமைத்தொகையுடன் சேர்த்து, ஒரு 'அபிமானி மகமை' என்று அனுப்புவதோடு, மற்றையோரையும் இம்முறையைக் கையாளச் செய்ய வேண்டுமென வேண்டுகிறேன். நமஸ்காரம்" என்று காரியதரிசி வாசித்துமுடித்தார். உடனே தலைவர் பாவோடி சுப்பனை யழைத்து, "இந்தக் கடிதமும் பணமும் உன்னிடம் யார் கொடுத்தார்கள்?" என்று கேட்டார்.

பா-சு.—நான் பாவோடுதற்குக் கண்டு திரிக்க நூல் கொடுத்த வீடுதோறும் போய்க் கண்டுகளை வாங்கி என் பெட்டியில் போட்டு வந்தேன் எனக்குத் தெரியாமல் யாரோ என் பெட்டியில் இதை வைத்து விட்டார்கள்.

உடனே காரியதரிசி "தலைவரவர்களே இந்தக் கடிதத்திலுள்ள எழுத்துக்கள் முத்தைப்போல் தனித்தனி வரைந்திருப்பதால் ஒரு பெண்மணியின் எழுத்தாக யிருக்க வேண்டும்" என்றார். என்றவுடனே சபையின் ஒரு மூலையில் எண்ணமிட்டுத் துன்பவடிவாயமர்ந்திருந்த நம் சுந்தரன் மெதுவாக வெழுந்து எழுத்தைக் கவனித்துக் களைத்துக்கொண்டு அமர்ந்தான். அப்பொழுது மளிகைக்கடை மரகதஞ்செட்டியார் குமாஸ்தா முத்து என்பவன் கூட்டத்தில் சுந்தர முதலியார் இருக்கிறார்களா? என்று கேட்டுக் கொண்டு சுந்தரனை நெருங்கி "இந்தாருமையா, இன்றைக்கு உங்கள் சீட்டு பிரைஸ் விழுந்தது; பணத்தைப் பெற்றுக்கொண்டு புத்தகத்திற் கையெழுத்துப் போடுங்கள்" என்றான். அதைக் கேட்ட சுந்தரன் விழித்து, "நானல்ல" வென்றான்.

முத்து :—வேறு யாரையா சுந்தரமுதலியார்? பாவோடி சுப்பா முதலியார் பிரதி அமாவாசையும் ஒரு சீட்டுப் பணம் நான்கு ரூபாயும் செலுத்தி ரசீது வாங்கி வந்தாரே? அவர் எங்கே?

பா.சு.—இவர்தான். இவர் மனைவியார் தான் எனக்கு நூல் சுற்றிய கூலியை, அமாவாசை வரையும் என்னிடமே நிறுத்தி வைத்து, சீட்டுக்குக் கொடுத்து ரசீது வாங்கி வரச் சொல்வது. ஏனப்பா சுந்தரம், என்ன யோசனை?

"இல்லை; கொண்டாரும் புத்தகத்தை" என்று கையெழுத்திட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டான்.

முத்து :—ஐயா, நாற்பத்தெட்டு ரூபாய் சரி பார்த்துக் கொள்ளும். இன்னும் இரண்டு சீட்டுப்போட வேண்டும்; போய் வருகிறேன்.

இவற்றை யெல்லாங் கவனித்த காரியதரிசி "இந்த உத்தமிதான் நமக்குக் கடிதமும் அணாவும் அனுப்பி யிருக்கவேண்டும்" என்றார்.

தலைவர் :—"யாராயிருந்தாலென்ன, இதை அனுப்பியவருக்கு இந்தக்கூட்டம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டது" என்றார். எல்லோரும் கரகோஷம் செய்தார்கள்.

பின்னர் தலைவர் நமது ஒவ்வொரு குடும்பத்திலும் சமயலுக்கு எடுக்கும் அரிசியில் ஒரு பிடி நமது சங்கத்திற்கென எடுத்துக் கவனத்துடன் ஒரு பாத்திரத்தில் போட்டு வருவதனால் விளையும் பயனையும் பெருமையையும் விரித்துக்கூற, இவ்விதமே நம்மவர்வதியும் ஊர்கடோறும் பிரஸ்தாபிப்பதோடு, இன்று முதல் நாமும் சேர்த்து பிரதி மாதமும் விற்றுத் தொகை சேர்த்து அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

சுந்தரன் மீனாட்சியிடம் தான் காட்டிய கோபத்தையும் துவேஷத்தையும் நினைந்து வருந்தித் தன்னைத் தானே நொந்துகொண்டு இரவு 7-மணி

க்கு வீடு சேர்ந்து சமயலறையைப் பார்த்தான். தீபம் எரிந்து கொண்டிருந்தது. பலகாரம் ஒரு தட்டில் மூடிவைக்கப்பட்டும், அடுப்பின் மத்தியில் ஒரு செம்பில் பால் வைக்கப்பட்டுமிருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தான், மீனாட்சி ஒருபுறம் வெறுந்தரையில் தேகம் ஆதியந்தம் போர்த்துப் படுத்திருப்பது கண்டு, அஞ்சிய குரலில் "மீனாட்சி" என்றழைத்தான். பதிலில்லை. சமீபத்தில் உட்கார்ந்து இருகையாலும் அன்பொழுக "மீனு" என்று எடுத்தான். அவளுடைய தேகம் அக்கினி ஜுவாலையை அள்ளி இறைப்பதே போலிருந்தது. அப்போது சுந்தரனுக்கு உண்டாகிய பயம் உச்சி மயிரைப் பிடித்து உலுக்கியது. "ஆ என் ஆருயிர்க் காதலி! என்னையும் மன்னிப்பாயா? என் முட்டாள் தனத்தை இன்றோடு விட்டு விடுகிறேன். இன்றைய கூட்டத்திலல்லவோ உன்னுடைய அறிவென்னும் அமுத கிரணம் பிரகாசித்தது! இந்தா, மரகதஞ்செட்டியார் சீட்டுப்பணம் அனுப்பினார். திரும்பி என் முகத்தைப் பார், கண்ணே!" என்று சுந்தரன் தன் மார்புடன் அணைக்க, மீனாட்சி குனிந்தபடியே "தாங்கள் சந்யாசத்தை விரும்ப மாட்டீர்களே." என்றாள்.

சுந்தரன்:—"கனவிலும் நினையேன் கண்ணே!

மனைத்தக்கமாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை

ஒரு முத்து மிரு முத்தும் மாறிமாற உடனே ஜுரம் நின்றுவிட்டது. சுபம்.

கு. பெ. கந்தசாமி முதலியார்,
உன்னியூர்.

## சுகாதாரப் பகுதி

### முறை ஜுரம் அல்லது மலேக்காய்ச்சல்
### Malaria (தொடர்ச்சி).

ஆகவே, மானிடரை வருத்திப் பலரை விண்ணேகச் செய்யும் முறை ஜுரத்திற்கு, மலேரியல் பாரெஸைட்ஸ் (Malarial Parasites) கள் காரண கர்த்தாக்கள் என்றுப், அவை விருத்தியாகிக் கெடுதி விளைவிப்பது கொசுக்கள் மூலமாக வென்றும் உணர்ந்தோமாகையால், அவலைகள் விர்த்தியாகும் வெள்ளம் பெருகி வாரா வகையாகிய அணையைப்போட முயல்வதே இனி செய்யும் ஆராய்ச்சியாகும்.

கொசுக்கள் பெருகும் வகைகளைத் தடுக்க முயலுமுன் அவைகளின் வகையராக்களை உணர்ந்து, அவற்றுள் ஒவ்வொன்றின் பேதங்களையும், சுபாவங்களையும் கூடிய வரையில் தெரிந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

அங்ஙனமாகக் கொசுக்களில் (1) க்யூலெக்ஸ் (Culex); (2) அனோபிலெஸ் (Anopheles) என இருவகை ஏற்படுகின்றன. அவற்றுள் (1) க்யூலெக்ஸின் (Culex) முட்டைகள், தண்ணீரில் கூட்டமாகப் படவுபோல் ஒன்று சேர்ந்திருக்கும். இதன் லார்வா (larva) தண்ணீரில் தலை கீழதாய் மிதந்து காணப்படும். சுவரின் மேல், இவை சற்று வளைந்து உட்காரும். இதற்கு சுவாசக் குழாயுண்டு. இதன் இரக்கைகள் புள்ளிகள் இல்லாமல் சுத்தமாக இருக்கும். இவைகளினால் மனிதர்களுக்குக் கெடுதி இல்லை.

(2) அனோபிலெஸின் (Anopheles) முட்டைகள் அநேகமாகத் தனித்தனியாகவே காணப்படும். இதன் லார்வா (larva) தண்ணீரில் நீர் மட்டத்தின் நேராகவே மிதந்து கொண்டிருக்கும். இவை சுவரின் மேல் நேர்கோணமாக (right angle) உட்காரும். இதற்குச் சுவாசக்குழாயில்லை. இதன் இரக்கைகள் பல நிறங்கள் பொருந்திய புள்ளிகளை உடைத்தாயிருக்கும். இவ்வகையராக் கொசுக்கள்தான் இந்நோயை உண்டாக்கும் புணிதவதிகள். இவ்வித்தியாசங்களைக் காணச் சிறிது பழக்கமுள்ளவர்களுக்குச் சுலபமாகவும், அங்ஙனமிலார்க்குச் சிறிது துர்லபமாகவும் இருக்கும். அணுதரிசனி (Microscope) யினால் காணல் சுலபம்.

இனி கொசுக்கள் உண்டாகும் இடங்களைப் பார்க்கில், இவைகள் குளம், குட்டை, கிணறுகளிலும், தண்ணீர் தங்கி நிற்கும் நிலம், செடிகள் அடர்ந்த நீரோடை, நெல்வயல்களிலும்;

உடைந்த சட்டி, பாண்டம், தொட்டி, சால் முதலானவைகளில் தங்கி நிற்கும் ஜலத்திலும் உண்டாகின்றன எனத் தெளிவாகும்.

இன்னும், மாரிக்காலங்களில், அடவிகளிலுள்ள உடைந்த அல்லது வெட்டின மூங்கில் குழாய்களிலும், மரப்பொந்துகளிலும், பெருத்த இலைகளினுடைய அடித்தண்டின் துவாரங்களிலும் தங்கி யிராநின்ற ஜலத்தில் கொசுக்கள் உண்டாகின்றனவென்று கண்டு தெளிந்தவர்கள் எழுதி இருப்பதையும் காணலாம்.

அவ்விடங்களில் கொசுக்கள் எவ்விதம் உண்டாகி, அபிவிர்த்தியடைந்து, தங்கள் தொழில்களைச் செய்கின்றன என்பதைச் சற்று ஆராய்வோம்.

இத்தகைய இடங்களிலுள்ள ஜலத்தின் பேரில் கொசுக்கள் உட்கார்ந்து முட்டை இடுகின்றன. இம்முட்டைகள் ஒரு வாரத்திற்குள் வெடித்து லார்வா (larva) ஆக வெளிவருகின்றன. இவை ஜலத்திலுள்ள தாவர வஸ்துக்களை (organic matters) மிக ஆவலுடனே உண்டு, தங்களுக்கு வேண்டிய மிகு சிறிய பூச்சிகளையும் புசித்து, மூன்று தினங்கட்குள் பியூபா (Pupa) வாக மாறுகின்றன. இவை கூட்டுப் புழுவாகையால், அவ்வமையம் ஒன்றையும் உட்கொள்ளுகிறதில்லை. மற்றுமிவைகள், மூன்று தினங்கட்குள், கூடுகள் வெடிக்க, சிறகுகளுடன் வெளியாகி, கொசுக்கள் எனப் பெயர் வகித்துப் பறக்க ஆரம்பிக்கின்றன.

பக்ஷிகள் சிறகு முளைத்துப் பறக்குங்கால் தாங்களே தங்களுக்கு வேண்டிய உணவாதிகளை நாடித் தேடிச் சென்று புசித்து வளர்ந்து அபிவிர்த்தியாகும் தன்மையைப்போல், இக்கொசுக்களும் பறந்து சுற்றுங்கால் தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைத் தேடிச் செல்லாநிற்கும். இவைகள் மனிதர் இரத்தத்தைக் குடித்துஜீவிக்கும் சுபாவமுள்ளவைகளாகையால் ஜனங்கள் வாசஞ்செய்யும் இல்லங்களை முக்கியமாகத் தேடிச் செல்கின்றன. அங்ஙனமடைந்தபின் இரவில் மனிதர்கள் உறங்கியோ, விழித்தோ இருக்குஞ் சமையத்தில் இவைகளின் ஜீவனோபாய மார்க்கங்களில் ஆரம்பித்து இவர்களின் இரத்தத்தை உறுஞ்ச முயலும்.

அக்கால் கொசுக்கள் திருட்டு புரட்டில்லாமல் சிறிய சங்கீதகோஷத்துடன் 'உங்கள் தேகத்திலுள்ள உதிரத்தில் கொஞ்சம் எங்களுக்கு உணவாக அளிப்பீரேல், நாங்களும் உங்களுக்குப் பிரதிபலனாக மலேரியல் பாரெஸைட்ஸ் (Malarial parasites)களை அளிக்கிறோம்' என்கிற எச்சரிக்கையுடன் தேகங்களின்மேல் உட்கார்ந்து, அதற்கென்று கடவுளால் ஏற்படுத்திய முட்போன்ற அவயவங்களினால் உதிரத்தை உறுஞ்சுகின்றன.

பாம்பிற்குப் பால் ஊட்டி வளர்க்கினும் அது பிரதிபலனாகத் தன்னிடத்திலுள்ள விஷத்தைத் தான் தர முயலும்; அதுபோல் மலேரியல் பாரெஸைட்ஸ் உள்ள கொசுக்கள் மூலமாக அவ் விஷக்கிருமிகள் மனிதர் தேகத்திற் புகுகின்றனவென்று ஒதியுணர்ந்தோர் வரைந்திருப்பதை உற்றுநோக்கின் வெளியாகும்.

கொசுக்கள் மனிதர் தேகத்திலுள்ள இரத்தத்தைக் குடித்து வளர்கையில் தாங்களே முட்டை இடக்கூடிய பக்குவ நிலையை அடைந்து தங்களுக்குச் சௌகரியமாகிய வாசஸ்தலங்களைத் தேடிச்சென்று அங்கு முட்டையிட்டு மேற்கூறியவாறே விர்த்தியாகின்றன என்று ஆராய்ச்சியில் நிர்ணயித்திருப்பதைக் காணலாம்.

மலைப்பிரதேசங்களில் மரங்கள், செடிகள், புல் பூண்டுகள் அடர்ந்திருப்பதால் மாரி காலங்களில் கொசுக்கள் இப்பாரிசங்களில் அதிகமாக விர்த்தியாகின்றன. இதைச்சார்ந்த கிராமவாசிகளில் அநேகர் இந்நோயால் அதிகமாக பீடிக்கப்படுகிறார்கள். ஆகவே இவ்வியாதிக்கு 'மலைக்காய்ச்சல்'லென்று ஒரு காரணப் பெயரும் வழங்கி வருகின்றது.

நான் ஆலங்காயம் மோட்டூர் பக்கங்களில் பிளேக் இன்ஸ்பெக்டர் (Plague Inspector) ஆகச் சிலகாலம் இருந்தேன். அங்குள்ள கிராமங்கள் மலைக்கருகாமையிலுள்ளவைகள். அக்கிராமவாசிகள் முக்கியமாக மாரிக் காலங்களில் பட்ட கஷ்ட நிஷ்டூரங்களை வரைய மிகப்பிரயாசம். நல்ல தேகஸ்திதியுள்ள ஒருவரையாவது அங்கு காண்பது அரிது. சிலர் உடல் வெளுத்தும், பலர் முகங்கள் சோகைதாங்கி ஊதியும், மற்றும் சிலர் பத்துமாத கெர்ப்பஸ்திரிகளுக்கொப்பான வயிறடைந்தும், வேறு பலர் நடக்க நாடியற்றும், இன்னும் பற்பல கோர ரூபங்களைத் தாங்கியும் தென்திசைக்கேகினர் பலர்.

இனி இவ்விடங்களில் கொசுக்கள் விர்த்தியாகாமல் தடுக்கும் உபாயங்கள் எவைகள் என உணரவேண்டும்.

கொசுக்கள் தாங்கள் உற்பத்தியாகும் இடங்களிலிருந்து அரை மைல் தூரத்திற்குள்ள

களே பறந்து வாசஞ்செய்யுமாகையால், இவைகள் பிரபலமாதற்குரிய தாவர வஸ்துக்கள் நிறைந்த நீர் தங்கிய இடங்கள் இராமல், பாதுகாத்துக்கொள்ள வேண்டியது முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

நம்முடைய வாச ஸ்தானங்களுக்கு அரைமைல் தூரத்திற்குள்ளாக, உபயோகமுள்ள குளமிருக்குமாகில், அதிலுள்ள புல், பூண்டு, பாசை, இன்னும் வேறு எவ்வித தாவர வஸ்துக்கள் இருப்பினும், அவைகளை எல்லாம் தண்ணீரில் தங்கவொட்டாமல் உடனுக்குடன் எடுத்துப்போட்டு, சுத்தஞ்செய்து கொண்டே இருக்கவேண்டும். இன்னும் குளக்கரை பக்கங்களிலுள்ள புல், பூண்டு, செடிகள் முதலானவைகளை வேறறக்களைந்து விடவேண்டியது அவசியம். கரையின்மேலுள்ள மரங்களின் கிளைகள் குளத்தின் தண்ணீர்ப் பக்கமாகச் சாய்ந்து இருந்தால் அவைகளின் இலைகளும் சருகுகளும் குளத்துத் தண்ணீரில் வீழ்ந்து ஜலத்தைக் கெடுப்பதால் அத்தகைய கிளைகளை வெட்டிப் போடவேண்டும்.

அனேக கிராமாந்தரங்களில், ஊருக்கருகாமையிலிருக்கும் குளத்தின் ஜலத்தைத்தான் அவ்வூரார் பானஞ் செய்யவேண்டி இருப்பதால் அவ்வூரார் எல்லோரும் ஒருமித்து அவ்விதக் குளங்களில் ஜனங்கள் குளிக்காமலும், துணிகளைத் துவைக்காமலும், ஆடு மாடுகளை விடாமலும் தக்க ஏற்பாடுகளைச் செய்து கொள்வது அத்தியாவசியம்.

அரைமைலுக்குள்ளாக இருக்கும் உபயோகமற்ற குளங்கள் குட்டைகளிருப்பின் உடனே அவைகளைத் தூர்த்து விடுவதுதான் நலம். வீடுகளிலும் ஊர்ப் பக்கங்களிலுமுள்ள கிணறுகளை அடிக்கடி சுத்தஞ்செய்து உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதால் கெடுதி ஒன்றுமில்லை. சௌகரியமுள்ளவர்கள் பொடாஸியம் பர்மாங்கனேட் (Pottassuim Permanginate) டையோ அல்லது பிளீசிங் பவுடர் (Bleaching powder) ரையோ உபயோகித்துக் கிணற்று ஜலத்தைச் சுத்தி செய்து வந்தால் மிகவும் நலம்.

இன்னும் குளங்களிலும் கிணறுகளிலும் கொசுக் குட்டிகளைப் புசிக்கும் ஓர்வித மீன்களை விட்டு வளர்த்து வருதல் அதிக நன்மைகளைப் பயக்கும்.

வீட்டிற்கு அரைமைல் தூரத்திற்குள்ளாக இருக்கும் பள்ளத்தாக்குகளைத் தரைமட்டமாகச் செய்து விட்டால் மாரிக்காலங்களில் அவ்விடங்களில் மழை ஜலந்தங்கா. செடி செட்டுகளில் கொசுக்கள் பகலில் பதுங்கி நின்று இரவில் வெளியாகி மனிதர்களை வருத்துமாகையால் அருகாமையிலுள்ள அவைகளை முற்றிலும் அழித்துவிடுவது நலம்.

சிற்சில கிராமங்களின் பக்கங்களில் நீரோடைகளிருப்பின் அதன் நீர்ப்பக்கங்களிலுள்ள புல் பூண்டு முதலானவைகளை அவ்வூரார் ஒற்றுமையுடன் களைந்து கொண்டிருந்தால் சுகமடையலாம்.

நஞ்சை சாகுபடியுள்ள வயல்கள் ஊருக்கு முக்கால் மைல் தூரத்திற்கு மேற்பட்டிருந்தால் அவ்வூரார் வைத்தியன் தயவை எதிர்பாராமலிருக்க முடியும்.

ஒவ்வோர் வீட்டிலோ அல்லது வீட்டின் பக்கங்களிலோ உபயோகமற்ற சட்டி, தொட்டி முதலானவைகளைக் கண்ணிலும் பார்க்கலாகாது.

(தொடரும்.)

மா. பாலசுந்தரநாத முதலியார்,
சானிடரி இன்ஸ்பெக்டர்.

## பொது விஷயங்கள்

### செங்குந்தரும் செந்தமிழும்.

திருக்கைலாயத்தின்கண் இறைவன் உமாதேவியாருடன் எழுந்தருளியிருக்கும் சமயத்தில், இந்திரன் முதலிய இமையவர் குழாங்கள் சென்று சூரபன்மனுதி அவுணர்களால் தங்களுக்குற்ற இடுக்கண்களைத் தீர்த்தருளும் பொருட்டு ஒரு திருக்குமாரரைப் தந்தருளல் வேண்டும் என்று வழிபட்டு நிற்க, உமைநாதன் கருணைகூர்ந்து அவ்வாறேயாகுகவெனத் திருவாய்மலர்ந்து தமது ஐந்து திருமுகங்களோடு அதோ முகத்தையும் தோற்றுவித்து அவ்வாறு முகங்களிலுள்ள நெற்றிக்கண்களினின்றும் ஆறு தீப்பொறிகளை யுண்டாக்கினர். அத்தீப்பொறிகளின் அனலாற்றாது உமாதேவியார் எழுந்தோட அவ்வம்மையாரின் திருவடிச் சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்க அதினின்றும் நவமணிகள் உதிர அந்நவமணிகளிலும் உமாதேவியாரின் சாயல்தோன்ற அச்சாயலினின்றும் நவசக்திகள் தோன்றினர். அச்சக்திகளின்மீது சிவபெருமானுடைய திருக்கண்ணோக்கஞ் செல்ல அவர்கள் கருப்பமுற்று பிரமதேவனைப்போல நந்திகணத் தலைவர்களை உந்திவழியாகப் பெற்றெடுத்த வீரவாகுதேவர் முதலிய இலக்கத்தொன்பதின்மர் வழிவந்தவர் செங்குந்தர் என்பது

"பாதனு புரத்திற் றேவி சாயைகண் டமலன் கொண்ட
காதலாற் கருப்ப மாகு நதிர்நவ மணிமா தர்க்கண்
மேதகு வீரத் தோடு மென்மிசை யோங்கும் வந்த
மாதவ வீர வாகுத் தலைவரித் தலைவர் மாதோ".

(ஈட்டி யெழுபது.)

என்னுஞ் செய்யுளால் இனிது விளங்கும்.

இனி இச்சீரிய செங்குந்த குலமக்கள் வடநாட்டு ஆரியரா? தென்னாட்டுத் தமிழ்ப்பழங்குடிகளா? என்று ஆராயப்புகுந்தால் கந்தமாதனத்தில் முசுமுகச்சோழன் அருந்தவம் பெரும் பகலாற்றி முருகக்கடவுளால் கொடுக்கப்பெற்றுச் சோழநாட்டின் தலை நகரமாகிய கருவூரில் வீரவாகுதேவர் முதலியோராகிய இலக்கத்தொன்பதின்மரையும் குடியேற்றி தனக்குத் துணையாகக்கொண்டு அரசு புரிந்து வந்தான் என்பது

"கந்தவேள் வரத்தாற் பெற்ற கழைகழல்
இலக்கத் தொன்பான்
குந்தரைக் கருவூர் தன்னிற் குடிகண்டு
சோணுட் டின்பேர்
மந்திர வழியா லாக்கி மாப்பெருந்
தலைமைத் தண்ட
சந்தமுங் கொடுத்து வைத்தான் றவலறங்
குந்தச் சோழன்."

(திருவாரூர் லீலை.)

என்னும் செய்யுளால் செங்குந்த குலதிலகர்கள் வடநாட்டிலிருந்து தென்னாடு வந்தவர்களாகவே புலப்படுகின்றது. ஆயினும், இவர்கள் மொழி தமிழ்மொழியா? வடமொழியா? என்பதைச் சிறிது ஈண்டாராய்வாம்.

தலைச் சங்கத்துள் தலைமைப் புலவனாய்த் தமிழாராய்ந்த தணிகைநாதன் இளவலாகிய வீரவாகுதேவர் முதலியோராகிய இலக்கத்தொன்பதின்மரும் தமிழ்ப் பழங்குடிகளாய்த் தமிழ் மொழியையே கைக்கொண்டு பயின்றுவந்தார்கள் என்பதற்குச் செந்தமிழ்ப் புலவனாகிய முருகப் பெருமான் இளவலாகத் திகழ்ந்தமையொன்றேசாலும். ஆகவே செங்குந்தகுலமக்கள் மொழி தமிழ்மொழியே யென்பது திண்ணம்.

இஃதன்றியும் இம்மரபின் வழிவந்து தெய்வத் தமிழ்க் கவிச்சக்கரவர்த்தியாக விளங்கிய புலவர் பெருமான் ஒட்டக்கூத்தர் குலோத்துங்கச்சோழன் அவையின்கண் தாய்க்குத் தலைப்பிள்ளைகளின் தலைச் சிங்காசனத்தில் எழுந்தருளி ஈட்டி யெழுபதென்னும் பிரபந்தத்தைப் பாடப் புகுமுன்னே கலைமகளாரைக் குறித்து சரசுவதி யந்தாதியெனுமோர் நூலைப்பாடிப் பின்னர் ஈட்டி யெழுபதென்னும் செஞ்சொற் பிரபந்தத்தை முட்டின்றிப்பாடி முடித்துப் பின் எழுப்பெழுபதென்னும் தெய்வீகப் பிரபந்தத்தைப்பாடி அற்ற தலைகள் உடலோடு பொருந்தி உயிர்பெற்றெழச் செய்தது தமிழாலன்றோ? செங்குந்தகுலமக்கள் தலையைத் தந்ததும் செந்தமிழைப் பெறுவதற்கே என்பது

"செந்தமிழ்க் காகப் போந்து சிவந்தபா வாடையாக
நந்தமக் கிலகா வெந்த நகரமு முளம் வியந்த
அந்தரத் தமரர் வாழ்த்தி யணிமலர் மாரி பெய்தார்
இந்தச் செங்குந்தர் பெற்ற விசையெவர் பெற்றாரம்ம"

(ஈட்டி யெழுபது.)

என்னும் செய்யுளால் இனிது விளங்கும்.

செந்தமிழானது தானொருகாலத்திலும் இறப்பின்றி இறந்தோர்களுக்கும் உயிரளிக்கும் ஊற்றம் இயல்பாக வுடையது என்பது,

"தொண்டர் நாதனைத் தூதிடை
விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்பு
பெண்ணுருவாக
கண்ட தும்மறைக் கதவினைத்
திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ
சாற்றீர்".

(திருவிளையாடல்.)

என்னும் செய்யுளால் செயற்கரிய செய்கைகளைச் செய்யவல்லதும் தமிழொன்றே என்பது தெளிவாகும்.

ஆகையால் செங்குந்தகுல மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எழுதும் கட்டுரைகளைக் கூடுமானவரையில் இத்தகைய சீரியல்பு வாய்ந்த தனித் தமிழ்லேயே எழுதுவதாகிய நன்றியை

தமிழ்த் தாய்க்குச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (தமிழ்மறை.)

இத்துறையில் நாம் முன்னேற்றமடையவதற்காகவே செய்து, உடல்பொருளாவி என்னும் மூன்றாலும் உழைத்துவரும் "தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்க" அமைச்சர்களுக்கு விரிந்த கல்வியையும், நிறைந்த வாழ்நாளையும், குறைவற்றசெல்வத்தையும், நோயற்றவாழ்வையும், வன்மைமிக்க வுள்ளத்தையும் தந்தருளுமாறு செந்தமிழ்த் தெய்வமாகிய முருகப்பெருமான் திருவடியைப் போற்றுவோமாக.

பீ. ந. கந்தசாமி முதலியார்,
திருப்பத்தூர்.

## உலக விநோதங்கள்

### மனிதனைப்போல் பேசும் இயந்திரம்.
### கேள்விகளுக்குப் பதிலளிக்கின்றது.
#### காப்டன் ரிச்சார்ட்ஸ் கண்டுபிடித்த கருவி.

இங்கிலாந்திலுள்ள சர்ரேயைச் சேர்ந்த காம்வெல் என்னுமிடத்தில் வசிக்கும் காப்டன் ரிச்சார்ட்ஸ் என்பவர் நூதனமான "ராபாட்" ஒன்றைச் (சொல்லும்படி செய்யும் அபார சக்தியுள்ள இயந்திரம்) கண்டுபிடித்திருக்கின்றார். இந்த இயந்திரம் மனிதனைப்போல சர்வ சாதாரணமாய்ப் பேசுவதுடன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலளிப்பதாயும், புதிதாக வரும் நண்பர்களுடன் கை குலுக்கிச் சந்தோஷத்தைத் தெரிவிப்பதாயும், மேலும் மணி பார்த்துச் சொல்வதுடன் உட்கார் என்றால் உயிருள்ள பிராணியைப்போல் வியக்கத்தக்கவாறு உட்காருவதாயும் சொல்லப்படுகின்றது.

#### ஓர் அற்புதத்தந்தி.

உலகத்திலுள்ள எந்த பாஷையில் பேசினாலும் அதைத்தான் கிரகித்து அதன் பொருளை நமக்குத் தேவையான பாஷையில் தெரிவிக்கக்கூடிய ஒரு அற்புதமான தந்தி (telephone) கண்டுபிடிக்கப்பட்டு தற்போது, பிரகசி முதலிய கருவிகளைக் கொண்டு ஒரு தேசத்தாரோடு மற்றொரு தேசத்தார் சண்டையிட்டு மடியும் யுத்தம் நிறுத்தப்படவேண்டுமென்று பல தேசத்தார் கூடி ஆலோசிக்கும் சர்வதேசிய கழகத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதாம்.

### வாரத்திற்கு ஒரு குழந்தை பிரசவம்.
### மூன்றாவது மாதத்திலேயே மீண்டும் கர்ப்பம்.
#### திருவாங்கூரில் அதிசய சம்பவம்.

நாகர் கோயில், செப, 11 "டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் நிருபர் கீழ்க்கண்ட வியக்கத்தக்க செய்தியை அனுப்பியிருக்கின்றார்:—மத்திய திருவாங்கூரிலுள்ள கார்த்திகைப் பள்ளியிலிருந்து மிக விசித்திரமான விவரங்கள் இங்கு எட்டியிருக்கின்றது. 1928 ஜூலை மாதம் இரண்டாவது வாரத்தில் 20 வயதுள்ள கருமார வகுப்பு ஸ்திரீ ஒரு குழந்தையைப் பெற்றாள் ஒரு வாரத்திற்குப்பின் அதே ஸ்திரீ மற்றொரு குழந்தையைப் பிரசவித்தாள். ஆயினும் இரண்டாவது பிறந்த குழந்தை அன்று தினமே இறந்துவிட்டது. தற்போது அந்த ஸ்திரீ மீண்டும் பூர்ண கர்ப்பமடைந்திருப்பதான குறிகள் தோன்றுவதாகச் சொல்லப்படுகின்றது. இத்தகைய விபரீதமான கேஸைக் குறித்து டாக்டர்களைப் பரிசோதிக்கச் செய்ததில் அவர்களும் அந்த ஸ்திரீ கர்ப்பிணியாயிருப்பதாகத்தான் முடிவு செய்தனர். மூன்று மாதங்களுக்கு முன் பிறந்த முதலாவது குழந்தை இன்னும் உயிரோடிருக்கின்றது. இத்தகைய விபரீத சம்பவத்தைக் குறித்து வைத்திய நிபுணர்களும் பிறரும் ஒருவித சமாதானமும் சொல்லமுடியாது திகைக்கின்றனர்.

### 18 வருடம் தூங்கிய பெண்
#### தற்கால கும்பகர்ணன் தங்கை.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த ஜோகன்ஸ்பர்க்கிலுள்ள ஆஸ்பத்திரியொன்றில் 18-வருடங்களாக ஒரே தூக்கம் தூங்கிய பெண் தற்போதுதான் சமீபத்தில் கண் விழித்தெழுந்தாள். இத்தகைய ஆச்சரிய சம்பவம் வைத்திய உலகத்திலேயே கேட்டிராததாயிருக்கின்றது. புராண காலத்தில் கும்பகர்ணன் ஓயாத் தூக்கம் தூங்கியதாகக் கேட்டிருக்கிறோம். வாஷிங்டன் இர்விங் என்னும் ஆங்கில நூலாசிரியர் எழுதியுள்ள ரிப்வான் விங்கில் என்னும் கதையில் ரிப்வான் விங்கில் பல வருடங்கள் ஒரே தூக்கம் தூங்கி எழுந்ததாயும், விழித்தெழுந்தபின் நாட்டின் ராஜீய நிலையும், நடைஉடைபாவனைகளையும் மாறி குழந்தைகளாயிருந்தவர்கள் கிழவர்களாகிப் பேரன் பேத்திகளுடன் வாழ்வதையும் கண்டு வியந்ததாயும் எழுதியிருக்கின்றார். ஜோகன்ஸ்பர்க்கில் சமீபத்தில் விழித்தெழுந்த மங்கையின் உறக்கம் ரிப்வான் விங்கிளின் தூக்கத்தைப்போல அனைத்தும் மாறுதலடைந்திருக்கக் கண்டு வெளியில் தலைகாட்டவும் வெட்கிப்பதாகத் தெரிகிறது. இப்பெண் 18 வருடங்களாக ஒரே தூக்கம் தூங்கித் தற்போதுதான் கண்விழித்தெழுந்திருக்கின்றார். 1910-ம் வருடம் இவருடைய காதலன் இறந்தபோது இவருக்கு 20 வயதானதாயும், தன் காதலனை இழந்த வருத்தத்தால் இப்பெண்ணுக்கு ஒருவித கொடிய வலிப்பு கண்டு அதன் பிறகு அப்பெண்ணொரே தூக்கத்திலாழ்ந்துவிட்டதாயும் அப்பெண்ணை அத்தூக்கத்திலிருந்து எழுப்ப என்ன செய்தும் பயன்படாமல் 18 வருடங்கள் தூங்கிச் சமீபத்தில் தானாகக் கண்விழித்தெழுந்ததாயும் சொல்லப்படுகின்றது.

அப்பெண் இவ்வாறு ஓயாமல் தூக்கத்திலிருந்தபோது இரண்டு மணிக்கு ஒரு தரம் மெல்லிய ரப்பர் குழாய் மூலமாக வைத்திய நிபுணர்கள் ஆகாரத்தைச் செலுத்திவந்ததாக சொல்லப்படுகின்றது. இப்பெண் சிறிது சிறிதாகத்தான் கண்விழித்தெழுந்ததாயும் விழித்தெழுந்த அப்பெண் வெளியில் தலைகாட்டவும் வெட்கப்பட்டுக்கொண்டியாரையாவது பார்த்தவுடன் தன் தலையை மூடிக்கொள்வதாயும், அப்பெண் இதுவரை ஏதோ கனகறியமுடியாத ஆரணடொருவார்த்தைகள் மட்டுந்தான் பேசியதாயும் சொல்லுகின்றனர்.

பதினெட்டு வருடம் தூங்கி எழுந்த அப்பெண் உலகமே முற்றும் மாறுதலடைந்திருக்கக் கண்டு வியப்படைந்தாள். இப்பெண் தூங்கத் துவக்கிய போது ஆகாயவிமானத்தைக் குறித்த பேச்சாந்தானிருந்ததாயும், அக்காலத்தில் விமானங்கள் பறக்கக்கூடுமாவென்பதைக் குறித்து ஆராய்ச்சிகள் முற்றுப்பெறாதிருந்ததாயும் ஆகாசவசனி என்பது கனவிலும் கருதப்படாத ஓர் சம்பவமாக விருந்ததாயுஞ் சொல்லுகின்றனர். மேலும் உலக மகாயுத்தமேற்படக்கூடுமோவென்ற விஷயம் 1910-ம் வருடத்தில் சந்தேகத்திலிருந்ததாயுங்கூறுகின்றனர். ஆனால் 18 ஆண்டுகள் நெடுந்தூக்கம் தூங்கி விழித்தெழுந்த அப்பெண் உலக சரித்திரத்திலேயே கேட்டிராத கொடிய மகாயுத்தத்தின் கஷ்ட நஷ்டங்களிலிருந்து விடுபட்டு முன்னேற உலகம் பெருமுயற்சி செய்து வருவதைக் காண அவருக்கு அளவற்ற வியப்புண்டாகுமென்பதில் ஐயமில்லை. அன்றியும் தற்போது எங்கும் பட்சிகள்போல் ஆகாய விமானங்கள் பறப்பதையும், வீடுகள் தோறும் ஆகாசவசனிகள் வைத்து உலகத்தின் ஒரு கோடியில் நடக்கும் சங்கீதக்கச்சேரி என்றும் நேரில் கேட்பதுபோல தெளிவாகப் பாவச்செய்வதையுங் காணும்போது அப்பெண்ணுக்கு எத்தகைய உணர்ச்சி ஏற்படக்கூடுமென்பதை யார்தான் அளவிட்டுச் சொல்லமுடியும்?

### ஓநாய்கள் வளர்த்த சிறுவன்.

மிதுனபுரி அனாதசாலையில் ஓநாய்களால் வளர்க்கப்பட்ட இரண்டு பெண்கள் இருந்துவருவதாக முன்னர் தெரிவித்திருக்கிறோம்.

இப்போது ருஷியாவில் ஓநாய்களால் வளர்க்கப்பட்டுவந்த மற்றொரு குழந்தையைப்பற்றிக் கேள்விப்படுகிறோம். இது ஏழு வயதுள்ள ஆண் குழந்தை. இச்சிறுவனுக்கும் மற்றச் சாதாரண குழந்தைகளுக்கும் மிகுந்த வித்தியாசம் இருக்கிறதாம். முதலில் இச்சிறுவன் காட்டில் கண்டுபிடிக்கப்பட்டபோது மிருகங்களைப்போல் கைகால்களால் தவழ்ந்து ஓடினான்.

அவனுக்கு நிமிர்ந்து கால்களால் நடக்க வருமாயினும் நாலுகால் பாய்ச்சலில் தவழ்ந்து ஓடத்தான் பிரியப்படுகிறான். அவனுக்குப் பசிஉண்டாகுமானால் இப்போதுகூட ஓநாய்களைபோலத்தான் ஊளையிடுகிறான் அவனைப் பரிசோதித்த வைத்தியநிபுணர்கள் அவன் பல வருஷங்களாகக் காய் கிழங்குகளைத் தின்றுவந்ததாக சொல்லுகிறார்கள். ஒரு கனவான் அவனைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டு அவனைக் கவனிப்பதற்காகவே ஒரு பெரிய வைத்தியரை நியமித்திருக்கின்றார்.

### பாட்டால் வென்று செய்துகொள்ளும் காந்தர்வ மணம்

இமயமலைச் சாரலிலுள்ள நேபாள தேசத்தில் வசிக்கும் 'லேம்பு' என்னும் ஒரு ஜாதியைச் சார்ந்த வாலிபர்கள் மணஞ் செய்துகொள்ள விரும்பினால் பாடித்தான் பெண்ணைப் பெறமுடியும். மணஞ் செய்துகொள்ள விரும்பிய ஆண்மகனும், பெண்ணும் ஓரிடத்தில் சந்தித்து அப்போதைக்கப்போது சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி சுயமாய்ப் பாடவேண்டும். முதலில், பிள்ளையாவது பெண்ணாவது பாட ஆரம்பிப்பார்கள். ஒருவர் பாடிய பாட்டிற்கு மற்றொருவர் பாட்டினாலேயே பதிலுரைக்கவேண்டும். ஒரு பாட்டிற்கு மற்றொரு பாட்டு திறமையிலும், வேடிக்கையிலும் மேம்பட்டேயிருக்கவேண்டும்.

இவ்வாறு இருவரும், தங்கள் சற்பனைச்சி முடி வுக்கு வருகிறவரையில் பாட்டால் தர்க்கித்துக்கொண்டேபோவார்கள். கடைசியில், அவ்வாலிபன் அப்பெண்ணை மணக்து கொள்ளவேண்டுமானால், அவள் பதிலுரைக்க முடியாதபடி அவள் வாயை அடக்க வேண்டும். அவ்வாறன்றிப்பெண் வாலிபனைக்காட்டிலும் அதிசாதுர்யமாகப்பாடி அவன் பதிலுரைக்க முடியாதபடிச் செய்வாளானால் மணக்க விரும்பிவந்த அவன் ஓடிப்போக வேண்டியதுதான். இவனைவிட சாமர்த்தியமுள்ள மற்றொருவன்தான் அவளை வென்று மணக்கவேண்டும்.

இவ்விதம் பாட்டில் ஜெயித்த வாலிபன் முதன் முதலில் அப்பெண்ணின் தகப்பனுக்கு ஒரு கொன்ற பன்றியின் உடலைப் பரிசாகக் கொடுக்கவேண்டும். கலியாணம் நடந்து பெண் திரும்பித் தங்கள் வீட்டிற்கு வருகிறவரையில் பெற்றோருக்குத் தங்கள் பெண்ணின் கலியாணத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. கலியாணத்திற்கு வருகிற இரண்டொரு நெருங்கிய சிநேகிதர்களுங்கூட தங்களுக்குவேண்டிய உணவுப் பொருள்களைத் தாங்களேதான் கொண்டுவர வேண்டும். அப்போது ஆட்டமும் பாட்டமும் நடக்கும். அதில் மணமகன் பேரிகையடிக்க மணமகள் ஆடுவாள்.

சில நாட்களுக்குப் பிறகு மத்தியஸ்தர் சிலர் பெற்றோருக்குக் கல்யாணம் நடந்த செய்தியைத் தெரிவித்து ஒரு கொன்ற பன்றியின் உடலும், ஒருபுட்டி 'ரம்' சாராயமும், ஒரு ரூபாயும் கொண்டுபோய்க் கொடுத்து அவர்கள் மனவருத்தம் நீங்குமாறு சமாதானப்படுத்துவார்கள். முதலில் அவர்கள் கோபித்துக்கொண்டு கல்யாணத்தை அங்கீகரிக்கமாட்டோம் என்று சொல்லி பிறகு சகசமாய்ச் சமாதித்து விடுவது வழக்கம்.

—Justice.

## செங்குந்தர் கிளர்ச்சி

### திருநெல்வேலி ஜில்லாவில் கிளர்ச்சி.

செங்குந்த மாணவர் சங்கம், திருநெல்வேலி (13-8-28) இரவு எழு மணிக்கு மாதாந்தர இரண்டாவது கூட்டம் சங்கத்தலைவர் திரு. வ. அ. சு வ. சிதம்பரநாத முதலியார் (முனிசிபல் கௌன்சிலர் & டிஸ்ட்ரிக் போர்டு மெம்பர்) அவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிற்று. செங்குந்தர் தேவார கோஷ்டி மாணவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டுக் கூட்டம் ஆரம்பித்தது. சங்கக் காரியதரிசி சபையோருக்கு முன்கூட்ட நடவடிக்கைகளை வாசித்துக்காட்டினர். டை சங்கத்தின் ஆதரவின் கீழ் D. முத்தையா முதலியார் அவர்கள் "ஒற்றுமை என்னும் விஷயத்தைப்பற்றி மகவும் விரிவாய் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். மற்றும் சிலர் டை விஷயத்தை ஆதரித்துப் பேசினர்கள். அக்கிராசனர் முடிவுரைகூற ஸ்ரீமான் முத்தைய முதலியார் அவர்களால் தலைவருக்கு வந்தோபசாரங்கூறப்பட்டபின் சபை இரவு 10½-மணிக்கு இனிது நிறைவேறியது.

D. Mutniah Mudaliar,
20-9-28. காரியதரிசி.

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், அம்பாசமுத்திரம்

மாதாந்தர 3-வது கூட்டம்.

1104-ம் ௵ ஆவணித் திங்கள் 30-ம் நாள் (14-9-28) சனிவாரம் இரவு எட்டு மணிக்கு ஸ்ரீகாசிவிஸ்வநாதசுவாமி தேவஸ்தான தர்ம பரிபாலகர்களில் ஒருவராகிய உயர்திருவாளர் வக்கீல் K. N. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் டை சங்கத்தின் மூன்றாவது கூட்டம் கூடிற்று. கடவுள் வணக்கம் பாடி சபை ஆரம்பிக்கப் பட்டது. முதலில் காரியதரிசியால முன்கூட்ட நடவடிக்கைகளையும் சந்தா வசூல் வரவு செலவு கணக்குகளையும் சபையோர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. பிறகு, "அன்பு," "சிவாலய தரிசனம்," "படிக்காசுத் தம்பிரான்," "சென்ற செங்குந்தர் முறையும் நின்ற செங்குந்தர் குறையும்," என்ற விஷயங்கள் பற்றி முறையே கோஷ்டி மாணவர்கள் ராமையா, நாராயணன், வேலாயுதம், ஆவுடையப்பன் இவர்கள் இனிமையாகப் பிரசங்கம்செய்தார்கள். பின்பு, திரு, ஆறுமுக முதலியாரவர்கள் கல்வியைப்பற்றி மிகத் தெளிவாகப் பேசினார்கள். அப்பால் காரியதரிசி திரு. சிவ. ரு ம. அருணாசலமுதலியாரவர்கள், "நாம் பெறவேண்டிய பதினாறுபேறு" என்னும் விஷயமாக அரியதோர் சொற்பெருக்கிட்டார்கள். இறுதியில் திரு. ச. சு. அகஸ்திய முதலியாரவர்கள் அகஸ்தியரின் பெருமை என்பதுபற்றி கடல் மடை திறந்தாற்போல சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். தலைவர் அவர்கள் பின்னுரை நிகழ்த்தியபின் காரியதரிசியால் வந்தோபசாரம் கூறப்பட்டுக் கடவுள் வாழ்த்துப் பாடி கூட்டம் இனிது நடைபெற்றது.



4-வது கூட்டம்.

1104-ம் ௵ புரட்டாசி ௴ 27௳ (12-10-28) சுக்கிரவாரம் இரவு எட்டுமணிக்கு மாதாந்தர நாலாவது கூட்டம் ஸ்ரீ அகஸ்தியர் கோவில் முன் மணிமண்டபத்தின்கண் கூடிற்று. கூட்டத்திற்கு இவ்வூர் உண்ணாச் செங்குந்தர்களும் வீரவநல்லூர்ச் சங்க உத்தியோகஸ்தர்களும் விஜயம் செய்தார்கள். வீரவநல்லூர் உயர்திருவாளர் வக்கீல் V. A சங்கரசுப்பிரமணிய முதலியார் B. A. B. L. அவர்கள் அவைத்தலைமை வகித்தார்கள். முதலில் தேவார கோஷ்டி மாணவர்களால் கடவுள் வணக்கம்பாடிக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு காரியதரிசியால் சபையோர்களுக்கு முன் கூட்ட நடவடிக்கைகளை வாசித்துக் காட்டப்பட்டது. பின்னர், சங்கக் காரியதரிசி சிவரும அருணாசல முதலியார் அவர்கள் கடவுள்தன்மையும் நாம் அடையும் நன்மையும் என்னும் விஷயமாய் கல் மனமும் கரையும்படி உபந்நியாசித்தார்கள். பின் மாணவர்கள் இராமையா, ஆவுடையப்பன் முறையே முன்னேற்றம், கல்விதானம் என்னும் விஷயங்கள் பற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். பின்பு திரு. மி. ஆறுமுக முதலியார் அவர்கள் கள்ளுண்ணாமை என்பது பற்றிப் பேசினர்கள். அப்பால் அத்திசாளநல்லூர் திரு. பே. முத்தையா முதலியார் அவர்கள் புலால் மறுத்தலைப்பற்றி சொற்பெருக்கிட்டனர். இறுதியில் அக்கிராசனர் அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும்பற்றி மிக விரிவாக எளிதில் புலனாகும்படி பேசி பின்னுரையை இனிது நிகழ்த்தினர்கள். அதன் பின் சங்கக் காரியதரிசியால் அவைத் தலைவர் அவர்களுக்கும் சபையோர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சங்கத் தலைவா அவர்களால் அக்கிராசனருக்குப் பூமாலை சூட்டப்பட்டது. மாணவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடி முடிந்ததும் கூட்டம் இனிது நிறைவேறியது.

ஆ. ம. ஆறுமுகமுதலியார்,
கூட்டுக் காரியதரிசி.

### இராமநாதபுரம் ஜில்லாவில் கிளர்ச்சி.

செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

மண்டல மாணிக்கம்.

1-10-28௳ இரவு 9-மணிக்கு இவ்வூர்ச் செங்குந்த முதலிமார் மடத்தில் டை சங்கத்தின் 8-வது கூட்டம் சங்கத்தலைவர் ஸ்ரீமான் சுருணைவள்ளல் மு. ஆ. பாதம்பிரியா முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. கடவுள் வாழ்த்துடன் ஆரம்பிக்கப் பெற்றுத் தலைவர் முன்னுரையானதும் காரியதரிசியவர்கள் சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகளை வாசித்துக் காட்டினர். உபதலைவர் ஸ்ரீமான் ஞா. சு. மு. பாதம்பிரியா முதலியாரவர்கள் 'சைக்கோஷரும் கைத்தறியும்' என்பதுபற்றியும், காரியதரிசி ஸ்ரீமான் இ. முனியப்பமுதலியார் அவர்கள் 'கல்வியின் அபிவிருத்தி' என்பது பற்றியும் அரிய உபந்யாசங்கள் செய்தார்கள். சமூக முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாயுள்ளது பத்திரிகையாகையால், சுதேசமித்திரன், சுதந்தரன், திராவிடன் முதலிய பத்திரிகைகளை வரவழைப்பதற்காக நம் குலமக்களிடம் தனித்தனியே சென்று நன்கொடை வசூலித்தல் முதலிய தொண்டை காரியதரிசியவர்களுடனிருந்து ஆற்றி சங்கத்திற்கு உழைத்துவரும் உபதலைவர் அவர்களுக்கும் இச்சங்க விஷயத்தில் இடைவிடாது சிரத்தை காட்டி வருவதோடு தடியாக பத்திரிகை வருவித்துத் தரும் திரு. அருப்புக்கோட்டை அ. கு சி. குழந்தைவேல் முதலியார் அவர்களுக்கும் நன்றி செலுத்தப்பட்டது ஊரார் வேண்டுகோளுக்கிணங்கி சங்கக் காரியதரிசியவர்கள் 'அரும்பவனாத ஆனந்தகானசபாவின் முக்கிய ஆக்டராக' இருந்து பல ஆக்டுகள் எடுத்துக்கொள்ள சம்மதித்திருப்பதைப் பற்றி அன்னாருக்கு நன்றி செலுத்துவதுடன் நன்மதிப்பும் தருகிறது என்று ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் முடிவுரையின் பின் வந்தனோபசாரத்துடன் இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

இ. முனியப்ப முதலியார்,
காரியதரிசி.

### மதுரை ஜில்லாவில் கிளர்ச்சி.

செங்குந்தர் சங்கம், மதுரை.

நாளது விபவ ௵ புரட்டாசி ௴ 14௳ (29-9-28) சனிக்கிழமையன்று இரவு 9 மணிக்குத் தல்லாகுளம் செங்குந்த விநாயகர் ஆலயத்தில் நமது சங்கமாதாந்தரக் கூட்டம் ஒன்று சங்கத்தலைவர் அவர்களின் தலைமையின்கீழ்க் கூடியது. கடவுள் வணக்கத்திற்குப்பின் திரு. எஸ். வீரபத்திரமுதலியார் அவர்கள் "இச்சங்கத்தின் தலைவர் திரு எஸ். சாலமுதலியாரவர்களை மதுரை சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டியின் ஓர் மெம்பராக நியமனம்செய்த காருண்ய கவர்ன்மெண்டாரவர்கட்கும் மற்றும் அக்கமிட்டிக்கு அன்னவரையே வைஸ் பிரஸிடெண்டாகத் தேர்ந்தெடுத்த அக்கமிட்டியாருக்கும் இச்சங்கம் தனது மனமுவந்த வந்தனத்தைச் செலுத்துகின்றது" என்கிற தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசியபின் திரு. வல்ல

சித்தமுதலியார் அதை ஆமோதித்துப் பேசினார். இத்தீர்மானம் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டு ஷை இருவருக்கும் இத்தீர்மானத்தை அனுப்பவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. பிறகு திரு. வெள்ளைச்சாமி முதலியார் செங்குந்தர் பெரும்பான்மையாய் வதியும் மதிச்சியம் சுகாதாரக் கேட்டிற்குட்பட்டிருப்பதை முன்னிட்டு இச்சங்கத்தின் மூலம் வார்டு கவுன்சிலருக்கும் முனிஸிபல் சேர்மென் அவர்களுக்கும் தெரிவித்து வேண்டிய சீர்திருத்தம் செய்ய வேண்டுமெனஎழுதிய 7-9-28உயுள்ள கடிதம்ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அவ்வண்ணமே ஷை இருகனவான்களுக்கும் இத்தீர்மானத்தை அனுப்பவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பின்பு தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

S. Manicka Mudaliar,
P. Muthukaruppa Mudaliar,
காரியதரிசிகள்.

## திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் கிளர்ச்சி

### உடையார் பாளையம் தாலூகாபோர்டுதேர்தலில் செங்குந்த அங்கத்தினரின் வெற்றி.

உடையார் பாளையம் தாலூகா போர்டுக்குட்பட்ட அழகாபுரம் சர்க்கத்தில் காலியாக இருந்த இரண்டு ஸ்தானத்திற்கு ஆண்டிமடம் தி. ஆ. க. குமாரசாமி முதலியாரவர்கள் திருநிய குமாரரும், பிரபல மிராசுதாரரும், சிறந்த நூல் ஜவுளி வியாபாரியும் 3, 4, தடவைகளில் இவ்வூர் கிராம முன்சிப் வேலைபார்த்தவரும் கிராமத்தலைவர்களில் ஒருவரும், உள்ளூர் தேவஸ்தான பரிபாலகரும், கிராமபஞ்சாயத்துக் கோர்ட்டுத்தலைவரும்,கோவாபரேடிவ் கிரெடிட் சொசைடியின் அதிபரும், ஆண்டிமடம் கோவாபரேடிவ் கிரெடிட் யூனியன் பிரசிடெண்டும்,கல்விச் செல்வத்திற் சிறந்தவரும், தருமகுணசீலரும், பரோபகார சிந்தையுடையவரும், இளம்பிராய முதலே பொதுஜன சேவை செய்வதே தம் கடமையெனக் கொண்டவருமான ஸ்ரீமான் ஆ. க. கு. சிவசிதம்பர முதலியார் அவர்களும், கூவத்தூர் மிராசு M. இரத்தினசாமி படையாச்சி யவர்களும், கொடுக்கூர் N. சுப்பராயப் பிள்ளையவர்களும் அபேக்ஷகர்களாக நின்றார்கள். நமது குலாபிமானிகளின் பெரு முயற்சியினாலும், இந்த கிராம மஹாஜனங்களின் போதரவினாலும், 29-8-28-ல் நடந்த மேற்படி தேர்தலில் நமது முதலியார் அவர்களுக்கு 715 ஓட்டுகளும் ஷை இரத்தினசாமி படையாச்சி யவர்களுக்கு 404 ஓட்டுகளும் கிடைத்தபடியால் இவர்கள் இருவரும் ஷை போர்டு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். ஷைதேர்தல் பொன்பரப்பி அழகாபுரம் ஆகியஇரண்டு ஊர்களில் வெகு மும்முரமாகவும் விமரிசையாகவும் நடந்தது. நமது ஆ.க கு. சி. முதலியார் அவர்களுடைய பெருந்தன்மையான குணத்திற்கும் பரோபகாரத்திற்கும், பொதுஜனசேவை செய்யும் அரிய கீர்த்திக்குமே இத்தேர்தலில் அன்னாருக்கு வெற்றி கிடைத்தது. ஷை முதலியார் அவர்களுக்கு இத்தேர்தலில் வெற்றி கிடைத்ததைப்பற்றி, 14-9-28-ல் ஆண்டிமடம் விளந்தை கிராம மஹாஜனங்களால் ஒரு சந்தோஷ உபசரிப்புக்கொண்டாட்டம் நடத்தி அன்னாருக்கு ஒரு வரவேற்புப் பத்திரமும் வாசித்தளித்து ஷை விருந்துக்கு வந்திருந்த மஹாஜனங்களுக்குச் சிற்றுண்டி சந்தன தாம்பூலங்கள் வழங்கப்பட்டு ஷை கனவானை மோடார் வாகனத்தில் மேளவாத்ய வாணவேடிக்கைகளோடு ஊர்வலமாக அன்னார் இல்லத்திற்குக் கொண்டுபோய்விட, அவ்விடம் சென்றிருந்தவர்களுக்கு மிகுந்த அன்புடன் முதலியாரவர்களால் பதில் மரியாதை நடத்தப்பட்டது. தற்காலம் இத்தாலூகா போர்டில் அரியலூர் ஸ்ரீமான் முத்துக்கருப்ப முதலியார் அவர்களும் கல்லாம்பாளையம் ஸ்ரீமான் நடராஜ முதலியார் அவர்களும் ஆண்டிமடம் ஸ்ரீமான் ஆ. கு. சிவசிதம்பர முதலியாரவர்களும் ஆக 3 கனவான்கள் நமது குலத்தினர்களாக இருக்கின்றார்கள். இன்னார்களை சேவற்கொடியோன் ஆவலாய்க் காப்பானாக.

சே. வை. நடராஜ முதலியார்.

## தஞ்சை ஜில்லாவில் கிளர்ச்சி

### மணக்குடி.

மணக்குடி கிராமத்தில் விபவ ஆண்டு முன்றாம் நாள் இரவு7-மணிக்குச் செங்குந்த மகாஜன சங்கஆதரவில் தலை ஞாயிறு போர்டு பாடசாலைத் தலைமை ஆசிரியர் உயர்திருவாளர் M. A. முருகேசப்பிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. தலைவர் அவர்கள் முன்னுரையாக சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும் சமூக முன்னேற்றத்தைப் பற்றியும் வெகு தெளிவாகஎடுத்துக்கூறினார். மற்றுஞ் சில அறிஞர்கள் பொதுஜன நன்மையைப் பற்றி அனேக உதாரணங்காட்டிப் பேசி முடித்தார்கள் இனி இச்சங்கம் மாதம் ஒரு முறை அவசியம் கூட வேண்டுமென்றும், இவ்வூர் போர்டு பாடசாலைக்கு திரு.பிள்ளையவர்களைத் தலைமையாசிரியராக நியமிக்க வேண்டுமென்று போர்டாரவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் பின்னுரைக்குப்பின் இரவு 10-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

வே. ரா. கணபதி முதலியார்,
காரியதரிசி.



## சேலம் ஜில்லாவில் கிளர்ச்சி.

### உண்மைச் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் மோகனூர்.

7-10-28-ல் இவ்வூர் காமாக்ஷியம்மன் ஆலயத்தில் சங்கத்தலைவர் திரு R சபாபதி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் பிற்பகல் 5-மணிக்கு ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் விஜயஞ்செய்திருந்தார்கள். கடவுள் வாழ்த்துக் கூறிய பிறகு காரியதரிசியால் முன் கூட்டத்தின் நடவடிக்கையும் வரவுசெலவு கணக்குகளும் வாசித்து ஒப்புக்கொள்ளப்பெற்றதும், தலைவர் அவர்கள் 'கல்வி' என்பதைப்பற்றி அரிய சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள். பின்னர் காரியதரிசியவர்கள் இவ்வூர் காமாக்ஷியம்மன் கோயில் திருப்பணி செய்யவேண்டியதைப் பற்றிக் கொண்டுவந்த தீர்மானத்தை அடுத்த வாரம் கூடும் ஸ்பெஷல் கூட்டத்தில் யோசிக்கத் தீர்மானிக்கப்பட்டது. சந்தாத் தொகை வசூலிக்கப்பெற்றுக் காரியதரிசியவர்கள் வந்தனமளிக்க தலைவர் முடிவுரைக்குப்பின் தெண்ணிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கும் அதன் பிரசாரகர்களுக்கும் ஜே! என்ற கோஷத்தோடு இரவு 9-மணிக்குச் சபை இனிது கலைவுற்றது:

து ல சடையப்ப முதலியார்,
காரியதரிசி.

### சேலம் அம்மாப்பேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்.

மேற் குறிப்பிட்ட செங்குந்த வாலிபர் சங்கம் அம்மாப்பேட்டையில் அருணகிரி முதலியார் தெருவில் பழையபள்ளிக்கூடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு 11 மாதங்களாகிறது. அதற்குத் திரு T. R. சோமசுந்தர முதலியார் உபதலைவராகவும் திரு P. ஆறுமுக முதலியார் 1. A. நாகலிங்க முதலியார் 2. இவர்கள் காரியதரிசிகளாகவும் திரு K. A ஆறுமுக முதலியர் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ஷை சங்கத்தில் புரட்டாசிமீ 22உ ஞாயிற்றுக்கிழமை மாலை 8-மணிக்குச் சங்கத்தின் விஷயத்தையும் வருஷ உற்சவத்தையும் நடத்தும்பொருட்டு ஒரு கூட்டம் கூடினார்கள். தலைவர் முன்னுரையுடன் கடவுள் வாழ்த்தும் நடந்தபிறகு தலைவர் T. R. அருணாசல முதலியார் சங்க விஷயத்தைப்பற்றியு வருஷ உற்சவத்தை நடத்தும் விபரத்தைப் பற்றியும் பேசினார். இன்னும் உபதலைவரும் சங்கத்தாரும் வருஷ உற்சவத்திற்கு செங்குந்த மித்திரன் பத்திரிகாசிரியர் திரு. ம சண்முகசுந்தர முதலியார் எம.ஏ., எல்.டி., அவர்கள் பிரஸிடெண்டாக நியமிக்க வேண்டும் என்றும் ஷையாரை வரவேற்புச் செய்யவேண்டுமென்றும் தீர்மானம் செய்தார்கள். வந்தனோபசாரத்துடன் இரவு 10-மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது என சங்கத்தின் தலைவர்கள் தெரிவிக்கிறார்கள்.



---

## செங்கல்பட்டு ஜில்லாவில் கிளர்ச்சி

### தேவாதூர்

14-10-28 உ 3-மணிக்குத் தேவாதூர் பஜனை மடத்தில் திருவாளர் ஏழுமலை முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அவ்வூரிலுள்ள நமது இனத்தினர்யாவரும் வந்து இருந்தனர். தொடர்ந்து நம்மவர்களிடை யேற்பட்டிருந்த சிறு வழக்குகளைத் தீர்த்து, நமது குல முதல்வராகிய முழுமுதற் கடவுளாம் ஸ்ரீ முருகப்பிரானை வணங்கி கூட்டம் இனிது நிறைவேறியது.

16 10 28 ல் மாலை 6-மணிக்கு திரு. குமாரசாமி முதலியார் அவர்கள் தலைமையில் பெரியதனம் திரு. சு. வேதாசல முதலியார் அவர்கள் இல்லத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதுபோது நமது தலைச்சங்கத்திற்குச் செலுத்தவேண்டிய கட்டணத்தைக் கூடிய விரைவில் ஊர் பொதுப்பணத்தில் கொடுத்துவிடவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. பிறகு திருவாளர் சு. தருமலிங்க முதலியார் அவர்கள் "தொழில் மறுத்தலும், குலதிலகரும்" என்னும் விஷயத்தை யாவரும் எளிதில் உணருமாறு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவர் பின்னுரைக்குப்பின் கூட்டம் இனிது நிறைவேறியது.

மூ. செல்லப்ப முதலியார்,
காரியதரிசி.

### கருந்தழி மேலவலம்பேட்டை.

27 9-28 காலை சுமார் மணி 10-க்குமேல் ஸ்ரீ பூலோக கைலாயமாய் விளங்கும் காஞ்சிமா நகரத்திற்குக் கீழ்ப்பால் நந்திகேஸ்வரர் திருக்காவல் பூண்ட சிவபுரம் சேர்க்காடு ஸ்ரீமங்கலம் சூழ்ந்த நாடும் ஷை நாட்டின் பலவூர்களும் ஷை நாட்டிற்கு மூன்று வழி கிளைநாடாகிய மூன்னூர் பரமேஸ்வரமங்கல நாட்டைச் சூழ்ந்த மதுராந்தகம் நாடும் அதன் பலவூர்களும் அப்பலவூர்களில் 6 வது கிராமமாகிய மேலவலம்பேட்டைக்கு வந்து கூடினர். அவ்வமயம் இவ்வூர் திரு க. சுப்பராவ முதலியார் வகையராவும் திரு சு. செல்லபெருமாள் முதலியார் வகையராவும் அவர்களை வரவேற்றனர்.

அக்கூட்டத்திற்குச் சிவபுரம் திருவாளர் முனிசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர்,

பிறகு இவ்வூரில் கோயில் முதலிய விவகாரங்களைப் பரிசல்செய்யவேண்டுமென்று சு. செல்லபெருமா முதலியாரும், சேர்க்காடு திரு. சின்னசாமி முதலியாரும் கேட்டுக் கொண்டனர். கோயில் கணக்குகளைச் சபைக்குக் கொண்டுவந்து ஆஜர் செய்யும்படி உத்தரவுசெய்து மாலை 1-மணிக்குக் கூட்டம் சேரவேண்டியதென்று கூட்டம் கலைந்தது.

மீண்டும் 1 மணிக்குக் கூட்டஞ்சேர்ந்தது. அக்காலத்தில் கணக்கும் ஆஜர் செய்யப்பட்டது.

கணக்குகளைப் பார்வையிட்டதில் சு.செல்லபெருமா முதலியார் வகையறாக்களே சுமார் 6-வருடகாலமாய் கணக்கு விலக்கமாய் இருந்த சமயத்தில் ஷை கற்பக விநாயகராலயத்தில் ஏற்பட்டுள்ள பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் முதலியன கட்டி அதற்குண்டான கைங்கரியங்களும் கானதுவரையில் நடந்தேறி வந்ததில் குருக்கள் சம்பளம் ரூபா 85-0-0 கொடுக்கும்படி பாக்கி இருந்ததை யாதொரு செலவுமில்லாதிருந்த அப்பாவு முதலியார் வகையறாவைக் கொடுக்கும்படி சபையோர்சொல்ல ஷையார்கள் ஒப்பாததால் இருந்ததையுன்னி சபையோர் ஷை அப்பாவு முதலியார் வகையறாவை ரூபா 70-0-0 கொடுத்துவிட வேண்டியதென்று ஜட்ஜ்மெண்ட் எழுதித்தீர்மானஞ் செய்து இருதிறத்தார்களிடத்திலும் கையொப்பம் வாங்கினார்கள்.

பின்பு ஷை கோயில்களுக்கு இன்றுமுதல் பஞ்ச பருவ உற்சவாதிகளும் ஊர்ப் பொதுவிலேயே நடத்த வேண்டியது என்று தீர்மானித்தார்கள்.

இவ்வூர் மு. மாணிக்க முதலியாருக்கும் ந. அண்ணாமலை முதலியாருக்கும் இருந்த மனைபரிவர்த்தனை பாபத்தில் சுமார் 8-வருஷத்திற்கு முந்தி ஷை மதுராந்தகம் நாடும் பலஊரும் இருந்து மாணிக்க முதலியாருக்கு அண்ணாமலை முதலியார் 16-அடி மனை காலி செய்து விடவேண்டியது என்று ஜட்ஜ்மெண்டு செய்த தீர்மானத்தை அனுசரித்து மாணிக்க முதலியாருக்கு அண்ணாமலை முதலியார் ரூபா 80-0-0 கொடுத்துவிட வேண்டியதென்று தீர்மானஞ் செய்தார்கள்.

மீண்டும் 1551-ம் வருஷம் நம்முன்னோர்களால் ஷை மதுராந்தகம் நாட்டில் சேயூர் ஸ்ரீ கந்தசாமி கோயிலுக்கு வருடப் பிரதி வருடம் இந்நாட்டில் உள்ள தறி 1-க்கு ரூ. 1-6.0 செலுத்தி காலைச்சந்திக் கட்டளையும் உற்சவாதிகளும் நடந்தேறி வருவதற்கு ஷை செல்லபெருமா முதலியார் வகை 6-வருடகாலமாய் வரி செலுத்தாதிருப்பதால் அவர்கள் பூராவும் செலுத்திவிட வேண்டியதென்று தீர்மானித்தார்கள்.

அவ்வரி ஒரே தடவையாகக் கொடுக்க காலங்கெட்டமாயிருப்பதால் வருடாந்திர வரியில் அரைவரி சேர்த்துச்செலுத்த வேண்டியதென்று தீர்மானஞ் செய்தார்கள்.

பிறகு இவ்வூருக்குப் பெரியதனம் வேண்டாமென்று ராஜிநாமா கொடுத்ததை சபையோர் ஆமோதித்து இவ்வூருக்குத் தறி 1-க்கு மாதம் ஒன்று வீதம் மாதாமாதம் ஒவ்வொருவரும் மாசவட்டம் தலைமைவகிக்க வேண்டியதென்று தீர்மானித்தார்கள்.

இவ்வூரில் எவ்வித விவகாரங்களும் ஷை மாசவட்டக்காரரிடமே சொல்லி நிவர்த்தி செய்துகொள்ள வேண்டியது என்று திரு. வீ. குமாரசாமி முதலியை மாசவட்டம் பார்க்கும்படி தாம்பூலம் கொடுத்த பின் சபையோருக்குத் தாம்பூலம் வழங்கி இரவு 2½-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

1-8-28 பௌர்ணமி யன்று நமது செங்குந்த அபிவிருத்தி சங்கக் கமிட்டி கூடியது. அவ்வமயம் ஏலச்சீட்டு விஷயமாகப் பேசி முடிவுசெய்யப்பட்டது.

பிறகு மேற்படி சீட்டிற்கு காரணகர்த்தர்களாக ஸ்ரீமான் கா. கா. கிருஷ்ணசாமி செட்டியார் 1. வேதாசல முதலியார், 2. க. ஏகாம்பர முதலியார் 3. சொ. சாம்பசிவ முதலியார் 4. கருங்குழிப்பேட்டை அ. குன்னப்ப முதலியார் 5 ஆகிய ஐவரும் கூடி பிரதி பௌர்ணமியிலும் பிரதி அமாவாசையிலும் நடத்தவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி 2-8 28-ல் ஏலம் விடவேண்டியதென்றும் அச்சீட்டிற்கு அறநெறி நிலைய ஏலச்சீட்டு எனப் பெயர் வழங்கவேண்டியதென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு சீட்டிற்கும் சந்தா 1-க்கு ரூபா 5-0-0 வீதம் சந்தா 10-க்கு ரூபா 50-0-0-ம் பௌர்ணமையில் ஏலம் விடவேண்டியது.

மேற்படி ஏலத்தில் யார் ஒருவர் குறைந்த கேள்வி கேழ்க்கிறார்களோ அவர்களுக்கு ஏலம் விடவேண்டியது.

ஏலத்தொகை முதல் சீட்டு ஏலதாரருக்குப்போக மிகுதித் தொகை நமது சங்கத்தைச் சேரவேண்டும்.

மறுசீட்டுமுதல் ஏலத்தொகைபோக மிகுதித் தொகையை 11 பாகமாகப் பகிர்ந்து ஒரு பாகம்சங்கத்திற்கும் மற்ற 10 பாகம் சந்தாதாரர்களுக்கும் கொடுத்துவிட வேண்டியது.

ஏலம் எடுத்தவர்கள் அப்போதே கமிட்டிகளாம் வேண்டப்படும் வீதம் சொந்தச் செலவில் அன்டிமாண்டு எழுதிக்கொடுத்துப் பணத்தைப் பெறவேண்டும்.



சீட்டின் நிபந்தனைகள் கா. கா. கிருஷ்ணசாமி செட்டியாரால் கொண்டுவரப்பட்டு சொ. சாம்பசிவ முதலியாரால் ஆமோதிக்கப்பட்டது. வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

சொ சாம்பசிவம்.

## காஞ்சீபுரம்.

### காஞ்சிச்செங்குந்த வாலிபர் சங்க நிர்வாகசபைக் கூட்டம்.

21-10-28௳ காலை 8-மணிக்கு ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் மடத்தில் ஷை சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம்ஒன்றுநடைபெற்றது. கூட்டத்திற்குத் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. செங்குந்தர் இரவு பாடசாலையின் பொருட்டு ஓர் சப் கமிட்டி ஏற்படுத்தப்பட்டு திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், C. அருணாசல முதலியார், D. C. கந்தசாமி முதலியார் ஆகிய மூவரும் அதற்கு அங்கத்தினர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

2. பாடசாலைத் தலைமை ஆசிரியர் கொடுத்துக் கொண்ட மனுக்கள் சப்கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டன.

3. சென்ற மாதத்திய வரவு செலவு கணக்கு பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகாரம் செய்யப்பட்டது.

4. 1929-ம் வருஷத்திற்காக இச்சங்கத்திற்கு நிர்வாக அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க 2-12-28 (விபவ௵ கார்த்திகைமீ 18௳) ஞாயிற்றுக்கிழமை மாலை 2-மணிக்கு ஜெனரல்பாடி மீட்டிங் நடத்த வேண்டுமென்றும் நிர்வாக அங்கத்தினர்களாக வர அபேட்சிப்பவர்களும் சாதாரண அங்கத்தினர்களாகச்சேர விரும்புகின்றவர்களும் நவம்பர் மாதம் 26-ந் தேதிக்குள் சந்தா செலுத்திச் சேர்ந்துகொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதனைத் துண்டுப் பிரசுர மூலமாக நம்மவர் அனைவருக்குந் தெரிவிக்கும்படிக் காரியதரிசிக்கு அனுமதி தரப்பட்டது.

5: தலைவர் முதலிய உத்தியோகஸ்தர் தேர்தலும் தலைச்சங்கப் பிரதிநிதி தேர்தலும் ஷை தேதிக்குப் பின்னால் நடத்திக்கொள்ளலாமென முடிவு செய்யப்பட்டது.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேறின.

6. அடுத்த ஜனவரி மாதத்தில் ஈரோட்டில் நமது மாகாண மகாநாட்டை நடத்தவேண்டிய முயற்சியினை ஈரோடு மகாஜனங்கள் கொண்டிருப்பதைக் கண்டு இக்கூட்டம் மிக்க சந்தோஷப்படுவதோடு வெற்றியுடன் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றது.

அத்துடன் எங்கும் வாலிபர் இயக்கங்கள் மிகப் பெருகிவரும் இக்காலத்தில், வாலிபர்களால் எத்தனையோ தேசங்களும் சமூகங்களும் விடுதலைபெற்று வரும் இக்காலத்தில் அம்மகாநாட்டுப் பந்தலிலேயே செங்குந்த வாலிபர் மகாநாட்டையும் அவசியமாக நடத்திவைக்க வேண்டுமென வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களை இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

7. ஈரோடு செங்குந்தர்களின் முன்னேற்றத்திற்காக பலவாண்டு[illegible]முயற்சியாற்றி வந்தவரும், அனைவருடைய மனதையுங் கவரத்தக்க சாந்தகுணமும் பெருந்தன்மையும் வாய்ந்தவரும், பெருஞ் செல்வந்தரும், பலத்த வியாபாரியுமாகிய திரு வ. வெ. க. ரா. சின்னப்ப முதலியாரவர்கள் 13-10-28௳ இரவு காசநோயால் பீடிக்கப்பட்டு இந்நில உலகம் நீத்ததை கண்டு இக்கூட்டம் மிக வருந்துவதோடு அவரது குடும்பத்தினருக்கும் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

8. காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் 11-வது வார்டுக்கு சமீபத்தில் நடைபெற்ற முனிசிபல் தேர்தலில் இம்முனிசிபாலிடியில் 25 வருடமாக கௌன்சிலராக இருந்து வருபவரும், மாஜி சேர்மெனும் தாலூக்கா போர்டு மெம்பரும், ஜில்லாபோர்டு அங்கத்தினரும், தேவஸ்தானக் கமிட்டித் தலைவருமா இருந்தவரும் நமது தலைவருமாகிய திரு. ம. சாம்பநாத முதலியாரவர்கள் வெற்றி பெற்றமைக்காக இக்கூட்டம் மிக்க சந்தோஷப்படுகிறது.

C. அருணாசல முதலியார்,
காரியதரிசி

### கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம்.

24-10-28௳ மாலை 8-மணிக்குக் கோடம்பாக்கம் விசாலாக்ஷி விலாசத்தில் ஷை சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று திரு. ப. ச. பாலசுந்தர முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. அப்போது திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் 'புண்ணிய க்ஷேத்திரங்களும் செங்குந்தர் மடங்களும் என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு உபந்யாசம் செய்தனர்.' பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

(1) ஈரோட்டு செங்குந்தர் சங்கத்தலைவரும் குல பிமானியும் பிரபல வியாபாரியும் திருச்செங்கோ

திரு. V. V. C. R. கந்தப்ப முதலியார் அவர்கள் சகோதரரும் ஆகிய திரு. V. V. C. R. சின்னப்ப முதலியார் அவர்கள் 13-10-28உ இரவு தேகவியோக மடைந்ததைப்பற்றி இக்கூட்டம் அவரது குடும்பத்தினர்க்கு தனது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

(2) சங்கக்காரியதரிசி திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களையும் திரு. ப. ச. தீர்த்தகிரி முதலியார் அவர்களையும், தலைச்சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்கு இச்சங்கத்தின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுப்பதோடு செலுத்தவேண்டிய வருஷக் கட்டணத்தைச் செலுத்தியதும் இச்சங்கத்தைத் தலைச்சங்கத்தின் அங்கமாகச் சேர்க்கும்படிக் காரியதரிசியவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

## அநுதாபம்.

(1) திருச்செங்கோடு யூனியன் சேர்மெனும், தாலுகா போர்டு அங்கத்தினரும், பிரபல செல்வந்தரும், பெரிய வியாபாரியும், நமது செங்குந்தர் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு உழைத்து வருபவருமாகிய திருவாளர் T. R. கந்தப்ப முதலியார் அவர்கள் இளைய சகோதரர் T. R. சின்னப்ப முதலியார் அவர்கள் விபவ ஆண்டு புரட்டாசித் திங்கள் 28-நாள் சனிக்கிழமை இரவு 9-30-மணிக்கு இம்மண்ணுலக வாழ்வை நீத்து எல்லாம்வல்ல முருகப்பெருமான் திருவடி நீழலடைந்தமையைக் கேள்வியுற்று நாம் மிகவும் வருந்துகிறோம். இவர் ஈரோடு செங்குந்தர் சங்கத் தலைவராக இருந்து பெருந்தொண்டாற்றி யுள்ளார். நம்மவர் நிலையினைச் சீர்திருத்தவேண்டுமென்ற எண்ணங்கொண்டு இளமை முதலாகவே வேலை செய்து வந்தவர். சாந்தமும் பெருந்தன்மையும் நிறையப்பெற்றவர். இத்தகையாரைச் செங்குந்த உலகம் இழந்தது ஓர் துர்ப்பாக்கியமே. அவரது ஆன்மா சாந்தியடையுமாறு நாம முருகப்பெருமான் திருவருளைச் சிந்திப்பதோடு அவர் குடும்பத்தாருக்கும் அவரது சகோதரர் திரு. T. R. கந்தப்ப முதலியார் அவர்களுக்கும் எமதுடைய ஆற்றொணா அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(2) சென்னை சிப்பிரிசென்சி மாஜிஸ்டிரேட் ஆபீஸ் மானேஜரும், நமது தலைச்சங்கத்தின் நிருவாக அங்கத்தினரில் ஒருவரும், குலாபிமானியும், ஆங்கிலப் பட்டதாரியுமான C. S. சபாபதி முதலியார் பி. ஏ., அவர்கள் இம்மாதம் விண்ணுலகெய்திய செய்தியையும் துயரத்துடன் வெளியிடுகின்றோம். நமது அநுதாபம் அவர்கள் குடும்பத்தாருக்கு உரித்தாகுக.—ப-ர்.

## பூந்துறை செங்குந்தர் மகாநாடு.

ஈரோட்டு செங்குந்த மகா ஜனங்கட்கும், நாட்டாண்மைக்காரருக்கும் ஏற்பட்டிருந்த ஒரு விவாதத்தை முடிவு செய்யும்பொருட்டு பூந்துறை செங்குந்தர் மகாநாடு 7-10-28உ முதல் 10-10-28உ வரை ஈரோடு ஸ்ரீ முத்துக் குமாரசாமி ஆலயத்தின் முன்பாக அதற்கென அமைக்கப்பட்ட பெருங்கொட்டகையில் நடைபெற்றது. சென்னிமலை, சித்தோடு முதலிய பூந்துறைநாட்டைச்சேர்ந்த சுமார் 40 கிராமங்களிலிருந்தும் 100 பிரதிநிதிகளுக்குமேல் வந்திருந்தனர். அன்றியும், சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரதிநிதிகளாக திரு. மா. அ. கனகசபை முதலியார், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் ஆகிய இருவரும், வைத்துக் குழி திரு. மொ. க. குழந்தையப்ப முதலியார் அவர்களும், உள்ளூரிலிருந்து சுமார் 300 செங்குந்தர்களும் ஏனையோரும் பந்தல் நிறையக் கூடியிருந்தனர். அனைவரையும் நாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லும்போதும், சாப்பிட்டு விடுதிக்குத் திருப்பி அழைத்துக்கொண்டு போகும்போதும் வாத்தியங்கள் பல முழங்கிக்கொண்டே யிருந்தன. இந்நாட்டுக் கூட்டம் பண்டைய முறைப்படியே மேல்நாட்டவரும் வியக்குமாறு மிக ஒழுங்காக நடத்தப்பட்டது. பண்டைய காலத்திய நியாய சபையினை இன்றும் அனைவருக்கும் உணர்த்தும் ஓர் பெற்றிக்காக இக்கூட்டம் விளங்கிய தென்பதில் ஐயமின்று.

முதலில் ஈரோடு செங்குந்தர்களால் ஓர் பிராது தரப்பட்டது. அதனைச் சபையினர் ஏற்று, குற்றஞ்சாட்டப்பட்டவரை வரவழைத்து சுமார் 3 மணி நேரம் வாக்குமூலம் வாங்கினர். பின்பு 42 சாட்சிகள் வரை விசாரிக்கப்பட்டு பிராது கொடுத்தவர் பதிலும் வாங்கப்பட்டது. மூன்று தினங்கள் இவ்விசாரணை நடைபெற்றபின்பு முடிவாகத் தீர்ப்புத் தயாரிக்கும்பொருட்டு 9-10-28உ மாலை 4 மணிக்கு வெளியூர் பிரதிநிதிகள் பலரடங்கிய ஒரு கமிட்டி தனியிடங் கருதி ஈஸ்வரன் கோயில் சென்றது. அன்றிரவு முழுதும் கமிட்டியார் எல்லா வாக்குமூலங்களையும் பரிசீலனை செய்து தீர்ப்புத் தயாரித்தனர். உள்ளூர் மகா ஜனங்கள் ஒருவரும் தூங்காது தீர்ப்பினையே எதிர்நோக்கி ஆலயத்தின் முன்பாகத் திரளாகக் குழுமியிருந்தனர். 10-10-28உ காலை ஆலயக் கதவுகள் திறக்கப்பட்டதும் விருதுகள் முழங்கின. கமிட்டியார் 7 மணிக்கு விருதுகளோடு ஸ்ரீ முத்துக்குமாரசாமி சந்நிதானஞ் சென்று தீர்ப்பினை வாசித்துக்காட்டினர். பிரதிவாதியின்மீது 4 குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தன. அவரும் அவற்றை ஒப்புக்கொண்டு விதித்த அபராதத்தினையும் கட்டிவிட்டனர். அன்று மாலை கூடிய கூட்டத்தில் பூந்துறை நாட்டிற்கு திரு. நா. மு. சண்முக சுந்தர முதலியார் நாட்டாண்மைக்காரராகவும், திரு. வ. மு. மொட்டையப்ப முதலியார் காரியக்காரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பட்டஞ் சூட்டப்பெற்றனர்.

பிறகு, சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரதிநிதிகள் செங்குந்தர் மகாநாடு கூடிய விரைவில் ஈரோட்டில் கூட்டவேண்டிய அவசியத்தினை எடுத்துக்கூறினர். கீழ்க்கண்ட தீர்மானம் திரு. S. சென்னியப்ப முதலியாரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு திரு. மொ. க. குழந்தையப்ப முதலியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது "நமது தலைச் சங்கத்தார் விரும்புகின்றபடி முதலாவது செங்குந்தர் மாகாண மகாநாட்டை அடுத்த ஜனவரி மாதத்தில் ஈரோட்டில் கூட்டவேண்டுமென்று அநேக கிராமங்களின் பிரதிநிதிகளடங்கிய இப்பூந்துறை நாடு தீர்மானிக்கிறது. பின்பு சென்னை தலைச் சங்கப் பிரதிநிதிகள் புட்பமாலைகள் சூட்டப்பட்டு பலவகை வாத்தியங்களுடனும் விருதுகளுடனும் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டுவந்து விடப்பெற்றனர்.

12-10-28உ மீண்டும் ஈரோடு செங்குந்தர்களின் கூட்டம் ஒன்று காஞ்சிபுரம் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் தலைமையில் கூடிய போது முனிசிபல் கவுன்சிலர் திரு. வ. மு. மொட்டையப்ப முதலியார், திருவாளர்கள் நா. மு. சண்முகசுந்தர முதலியார், S. சென்னியப்ப முதலியார், S. ராமசாமி முதலியார், C. வெங்கடாசல முதலியார், N. கருப்பண்ண முதலியார், M. லட்சுமண முதலியார் ஆகிய எழுவரும் மாகாணச் செங்குந்த மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களாகவும், திரு. S. சென்னியப்ப முதலியாரவர்கள் வரவேற்புக் காரியதரிசிகளில் ஒருவருமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்றியும், பொதுத் தருமத்திற்காக ஈரோடு செங்குந்தர்களில் கடைக்காரர்கள் தினம் 1க்கு 3 பை வீதமும், பாவு தோய்வோர் பாவு 1க்கு ஒரு அணா வீதமும் உண்டியல் செலுத்தவேண்டுமென்றும், இப்படிச் சேரும் தொகையில் ஆறில் ஒரு பாகம் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கத்திற்கு அனுப்பிவிட்டு மிகுதியை ஊர்ப் பொது தருமத்திற்குச் செலவழிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறியபின் தலைவருக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை இனிது நிறைவேறியது.

## தலைச்சங்கப் பிரசாரம்

### மதுராந்தக நாட்டுக்கூட்டம்.

பல கிராமங்கள் கூடிய மதுராந்தக நாட்டுக்கூட்டம்

2 -9-28உ மதுராந்தகத்தில் பெரியதனம் திருவாளர் அருணாசல முதலியார் அவர்கள் இல்லத்தில் கூடிய கூட்டத்திற்குச் சிவபுரம் திசைநாட்டார்களும் வந்திருந்தனர். அச்சமயம் நமது தலைச்சங்கப் பிரசாரகர் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் 'சமூக முன்னேற்றத்திற்குக் கல்வியே இன்றியமையாததென்றும், ஒற்றுமை, சுயநலமின்மை, குலாபிமானம் முதலிய பல நற்குணங்களையும் கல்வியே உண்டாக்குமென்றும், பொதுவாய் நமது சமூக முன்னேற்றத்திற்காக உழைத்துவரும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமானது நமது குல இளைஞர்களை உயர்தரக் கல்வியில் பயில்விக்க வேண்டுமென்பதை முக்கிய நோக்கங்களுள்ஒன்றாகக்கொண்டு உயர்தரக் கல்வியை விரும்பும் பல செங்குந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் முதலிய கொடுத்துதவி ஆதரித்து வருவதால் அதன் நோக்கங்களை முற்றுப்பெறச் செய்வதற்கு மாபெருநிதி யொன்று தேடிவைத்தல் செங்குந்தர்களின் கடமை என்றும், தெளிவாய் எடுத்துரைத்தனர். அதன்பயனாக மதுராந்தக நாட்டிலிருந்து வருஷா வருஷம் சாசுவதமான வருவாய் ஒன்றைச் சங்கத்திற்குத் தேடிவைப்பது அவசியமென்றும், இந்நாட்டுக் கூட்டம் கூடுவதற்குக் காரணமாயிருந்த விவகாரம் பூர்த்தியான பிறகு அதைப்பற்றி யோசிக்கவேண்டுமென்றும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பெற்றது.

### அசனம்மாபேட்டை,

23-9-28உ காலை பிரசாரகர் அசனம்மாபேட்டைக்குச் சென்று 25-9-28உ இரவு 8½-மணி

க்கு அவ்வூர்ச் செங்குந்தவாலிபர் சங்கத்தின் ஆதரவில் கூடிய பொதுக்கூட்டத்தில் 'ஒட்டக்கூத்தரும், விநோத ரசமஞ்சரியும்' என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யசித்தார்.

### திருவோத்தூர்.

28-9-28 திருவோத்தூர் சென்று அங்குள்ள நம் குலப்பிரமுகர்களைக் கண்டு அவ்வூரில் கிளைச் சங்கம் நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்துவிட்டு 29-9-28-ல் சென்னைக்கு வந்து சேர்ந்தனர்.

---

### சீமந்த நன்கொடை

சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கத்தின் நிருவாகசபை அங்கத்தினரிலொருவரும், திருவல்லிக்கேணி செங்குந்தசங்கத்தின் உபதலைவரும், சென்னை வாலிபர்சங்கஉபதலைவரும்ஆகிய திருவாளர் மா. ப. கந்தசாமி முதலியார் பி.ஏ.,பி.இ., அசிஸ்டெண்டு எலெக்ட்ரிகல் இன்ஜினியர் அவர்கள் மனைவியாருக்கு சமீபத்தில் நடந்தேறிய சீமந்த கல்யாணத்தை முன்னிட்டு நமது சங்கத்திற்கு மேற்படி முதலியாரவர்கள் நன்கொடையாக ரூபாய் 2 கொடுத்தனர். அவரது குலப்பற்றுக்கும் உதவிக்கும் இச்சங்கம் நன்றி பாராட்டுகிறது.—அமைச்சர்.

### ஓர் திருத்தம்.

### திருச்செந்தூர் மடம்.

